## நிழல் தந்த விருட்சங்கள்

வாழப்பிறந்தவர்கள் தான் மனிதர்கள். ஆனால் அவர்களின் வாழ்க்கைப் பாதையில் பல தடைக்கற்கள் போடப்படுகின்றன. இக்கற்களில் தடக்கி விழுந்து, எழுந்து வாழப் பழகியவர்கள் தான் உலகம் போற்றும் உன்னத மனிதர்கள் ஆகின்றனர் . இவ்வாறானவர்கள் பலர். இவர்களில் சிலர் மாற்றுத்திறனாளிகளாக இருப்பது தான் அதிசயிக்கத்தக்க விடயம். ஆம்! உடல் சார்ந்தும், புலன் சார்ந்தும், உள்ளம் சார்ந்தும் பாதிப்புற்ற இவர்கள் ஆரோக்கியமான ஒரு மனிதனைக் காட்டிலும் அதிகளவு சவால்களுக்கு முகம் கொடுத்தே தம் வாழ்க்கையில் வெற்றி பெறுகின்றனர். இவ்வாறு வெற்றி பெற்றவர்களது வரலாறுகள் வலிகளை உரமாக்கி எழுந்த உலக விருட்சங்கள் என்ற மகுடத்தில் வலுவை அலங்கரிக்கின்றன.

இவ்வாறாக 25 இதழ்களில் வெளிவந்த இவர்களது சுருக்க வரலாறுகள் இங்கு பதிவு செய்யப்படுகின்றது. இது பலருக்கும் ஒரு நிழல் தரும் விருட்சமாக அமையும் என நம்புகின்றோம். இவர்களது முழுமையான வரலாறுகள் வலு இதழ்களில் பிரசுரிக்கப்பட்டன. வலு-1 தொடக்கம் வலு-5 வரையான இதழ்களில் இப்பகுதிக்குரிய ஆக்கங்களினை திருநெல்வேலி சதானந்தசர்மா அவர்களும், வலு-16 தொடக்கம் வலு-25 வரையான ஆக்கங்களினை ஏ.ஜே. ஞானேந்திரன் அவர்களும் எழுதியிருந்தனர். இவர்களை வலு நன்றியுடன் நினைவு கூறுகின்றது.

நா.கீதாகிருஸ்ணன்
பிரதம ஆசிரியர்.

# ஹெலன் அடம்ஸ் கெல்லர்

## வலு- 01



அமெரிக்காவின் அலபாமா மாநிலத்தின் டஸ்கம்பியா நகரத்தில் 1880 ஆம் ஆண்டு யூன் மாதம் 27 ஆம் திகதியன்று ஹெலன் அடம்ஸ் கெல்லர் பிறந்தார். ஹெலனின் வயது பத்தொன்பது மாதங்களாக இருந்தபொழுது இனந்தெரியாத நோய் அவளைத் தாக்கியது. இதன் பெறுபேற்றால் இவளின் கண்பார்வை மட்டுமல்லாது கேட்கும் திறனும் அற்றுப்போனது. குழந்தையாக இருந்த இவள் பேசக்கற்றுக் கொள்ளவில்லை என்பதால் பேச்சுத்திறனையும் பெற்றிருக்கவில்லை. இந்நிலையில் மற்றவர்களுடன் தொடர்பாடலை ஏற்படுத்த முடியாமல் ஆவேசமும் ஆத்திரமும் கொண்டாள். பின்னைய நாட்களில் தனது சுயசரிதையில் ஹெலன் இதனைக் குறிப்பிடுகையில் ''இந்த ஆத்திரமான எழிச்சி நாளாந்தம் ஏற்பட்டது, சில வேளைகளில் நாள் முழுவதும் ஏற்பட்டது என்பதால் ஏதோ ஒரு வகையிலான தொடர்பாடல் முறை அவசியமாகவும் அவசரமாகவும் தேவைப்பட்டது'' என்கிறார்.

ஹெலன் கெல்லர் பேர்க்கின்ஸ் பார்வையற்றோர்க்கான பாடசாலையில் சேர்க்கப்பட்டார். அங்கு அவளுக்கு 6வது வயதான போது அதாவது 1887 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 3ஆம் திகதி ஆன் ஸல்லிவன் (Anne sullivan) என்ற ஆசிரியை கிடைத்தார். பின்நாளில் இந்த நாளைப்பற்றிக் குறிப்பிடும் போது ஹெலன் கெல்லர். ''எனது ஆத்மாவின் பிறந்த நாள்'' (My soul's birthday) என்கிறார். ஆசிரியர் ஸல்லிவன் பார்க்கவோ, கேட்கவோ, கதைக்கவோ முடியாத ஹெலனின் உணர்வைப் புரிந்து கொண்டு அதற்கேற்ப அவளை வழிப்படுத்தினார். ஆரம்பத்தில் ஆசிரியருடன் முரண்பட்ட ஹெலன் பின்னர் 50 வருடங்கள் இணைபிரியாத நண்பர்கள் ஆயினர். இறுதியில் ஆன் ஸல்லிவனின் மரணமே பிரிவிற்கு காரணமாயிற்று.

ஆரம்பத்தில் எதையுமே அறிந்திடாத ஹெலனுக்கு சகல விடயங்களையும் அறிய வைக்க ஆசிரியர் ஸல்லிவன் போதித்த முறை சொல்லில் அடங்காதது. முதலில் சொற்களையும் பின் அவற்றுக்கான பொருள்களினையும் ஹெலனுக்கு அறிய வைத்த ஆசிரியை பின்னாளில் ‘‘பிறெயில்’’ முறையில் கல்வியைத் தொடர வழி காட்டினார். ஹெலனுக்கு பத்து வயதாக இருந்த பொழுது பேச்சுப் பயிற்ச்சிக்கென சாரா.ஃபுல்லர் என்ற சிறப்பு ஆசிரியை நியமிக்கப்பட்டார். முதலில் பேசுபவரின் உதடுகளைத் தன் கைகளால் தொட்டுணர்ந்து பேசிப்பழகினார். ஆரம்பத்தில் அவர் பேச்சு ஆசிரியருக்கு மட்டுமே புரிந்தது. பின்னர் கரகரத்த குரலில் அவர் வெளிப்படுத்திய கருத்துக்களோ மிக ஆழமானவையாக இவ்வுலகில் பரவியது.

ஆசிரியர் ஸல்லிவன் 1888 ஆம் ஆண்டில் ஹெலன் கெல்லரை மற்றப்பிள்ளைகளுடன் சேர்த்து கல்வி பயில வைத்தார். அவர் பிரெஞ்ச், கணிதம், புவியியல் உட்பட பல பாடங்களையும் பயின்றார். ஆரம்ப கல்வியை பேர்க்கின்ஸ் பார்வையற்றோர்க்கான பாடசாலையில் பயின்ற இவர் கேம்பிரிட்ஜ் பெண்கள் பாடசாலையிலும், றெட்கிளி.ஃப் பல்கலைக் கழகத்திலும் கல்வியை கற்று 1904ஆம் ஆண்டு உலகின் கட்புல செவிப்புல இழப்பாளர்களின் முதலாவது பட்டதாரி என்ற பெருமையினை தனதாக்கினார். ஹாவார்ட் பல்கலைக்கழகம் முதன்முதலாக பெண்களுக்கு வழங்கிய கௌரவப் பட்டத்தினையும் இவர் பெற்றார். இது தவிர கிளாஸ்கோ, ஸ்கொட்லாந்து, டெல்லி, பேர்லின், ஜெகனஸ்பேர்க் பல்கலைக்கழகங்களும் இவருக்கு கௌரவப் பட்டங்களை வழங்கின.

அவரது எழுத்தார்வம் ஐம்பது ஆண்டுகளையும் கடந்தது. 1903இல் அவரெழுதிய ‘‘என் வாழ்க்கைக் கதை’’ பெண்கள் சஞ்சிகையொன்றில் தொடராக வந்து பின் புத்தகமாக்கப்பட்டது. இது உலகின் ஐம்பதிற்கும் மேற்பட்ட மொழிகளில் வெளியிடப்பட்டது. இது தவிர இவர் எழுதிய தன்னம்பிக்கை ஒரு கட்டுரை, நான் வாழும் உலகம், கற்சுவரின் கீதம், இருளிலிருந்து, என் மதம், மாலைக்காற்று அமைதி, நம்பிக்கை கொள்வோம், ஆன் சல்லிவன் மேஸி என் ஆசிரியை, திறந்த கதவு போன்றவையும் புகழ் பெற்றவை. இது தவிர பார்வையின்மை, காதுகேளாமை, சமூகவியல், சமூகம் சார்ந்த பிரச்சினைகள், பெண்ணுரிமை எனப்பல ஆக்கங்களினை பத்திரிகைகளிலும், சஞ்சிகைகளிலும் எழுதினார். இவர் ஒரு சிறந்த பேச்சாளரும் ஆவார். இவர் தன் ஆசிரியருடன் சேர்ந்து உலகின் ஐந்து கண்டங்களிலும் கால் பதித்த பெருமையினையும் கொண்டவர். இதனால் பல பெரிய மனிதர்களின் அறிமுகத்தையும் நட்பையும் பெற்றுக் கொண்டார்.

ஹெலன் தன்னைப் போன்றவர்களின் எதிர் கால வாழ்க்கைக்காக தனக்கு வந்த அனைத்து உதவிகளையும் பரிசுகளையும் கொண்டு நிதியம் ஒன்றை நிறுவினார். இதனூடாக அவர்களுக்கு உதவி செய்தார். தனது குறைகளைப் பற்றி சிறிதும் கவலைப்படாமல் உலகை வலம் வந்த ஹெலனை பக்கவாதம் வீட்டிலேயே முடக்கியது. இதனால் 1968 ஆம் ஆண்டு மரணத்தைத் தழுவிக் கொண்டார். ‘‘இந்த இருண்ட அமைதியான என் வாழ்வை கடவுள் ஏதோவொரு திட்டத்தோடு தான் படைத்திருக்கிறார். அதை என்றாவது ஒரு நாள் நான் உணர்வேன். அப்போது நான் அது குறித்து மகிழ்வேன்’’ என ஹெலன் தனது வாழ்க்கை பாடத்தினை இந்த சமூகத்திற்கு கற்கத் தருகிறார்.

## டொரி.ஃபாக்ஸ்

### வலு - 02




கனடா நாட்டின் மனிற்ரோபா மாநிலத்திலுள்ள வினிபெக் நகரத்தில் 1958ஆம் ஆண்டு ஜூலை மாதம் 28ஆம் திகதி றோலன்ட் பெற்றி தம்பதியினருக்கு இரண்டாவது மகனாக டொரி.ஃபாக்ஸ் (Terry Fox) பிறந்தார். சிறுவயதினிலேயே துடினம் மிக்கவராக காணப்பட்ட இவர் உதைபந்தாட்டம், றக்பி, பேஸ்போல் போன்ற விளையாட்டுக்களில் விருப்பமுடையவராக இருந்தாலும் கூடைப் பந்தாட்டமே அவருக்கு மிகவும் பிடித்த விளையாட்டு ஆகும்.

டொரி.ஃபாக்ஸ் சைமன் பிறேசர் பல்கலைக்கழகத்தில் உடற்பயிற்சி சம்பந்தமான ஆசிரியப் பணிக்கு ஏற்ற வகையிலுள்ள மனித அசைவுகள் பற்றிய விளக்கங்களையும் உடற்கூறு மற்றும் அதன் இயக்கம் பற்றியது மட்டுமல்லாது சற்று உளவியல் ரீதியான அம்சங்களையும் கொண்ட "Kinesiology" என்ற பயிற்சி நெறியினைப் கற்றுக் கொண்டார். அவ் பல்கலைக்கழகத்திலும் மிகத் திறமையான கூடைப்பந்தாட்ட வீரர்களை பின் தள்ளி தன் கடுமையான பயிற்சியின் மூலம் முன்னணியில் இருந்தார்.

1976ம் ஆண்டு நவம்பர் மாதம் 12ம் திகதி அன்று விபத்தொன்றில் வலது கால் பாதிக்கப்பட்டது. இதற்கு இவர் முறையான வைத்தியம் செய்யவில்லை. நாளடைவில் அக்காலில் வலியின் தீவிரம் அதிகரிக்கவே 1977ம் ஆண்டு மருத்துவமனையை நாடினார். அங்கு மேற்கொள்ளப்பட்ட வைத்திய பரிசோதனையில் "Osteosarcoma" என்ற புற்று நோய் இருப்பது தெரியவந்தது. இதனால் வலதுகால் முழங்காலுடன் நீக்கப்பட்டு செயற்கைக்கால் பொருத்தப்பட்டது. மூன்று வாரங்கள் வரை செயற்கைக் காலுடன் நடைபயின்றார்.

பிரீட்டி கொலம்பியா புற்றுநோய் தடுப்பு முகவர் நிலையத்தில் சுமார் 16 மாதங்கள் கீமோதெரபி என்ற சிகிச்சை பெற்றார். அங்கு சகநோயளார்கள் நோயினால் பட்ட துன்பத்தினையும் இறப்புக்களையும் அந்த நிலையத்திலுள்ள வசதி குறைபாடுகளையும் அவதானித்தார். அந்த நிலையத்திற்கு உதவ நினைத்த அவர் அதற்கான வழி வகைகளை சிந்தித்தார். டெர்ரியின் அறுவை சிகிச்சைக்கு முதல் நாள் இரவு, நியூயோர்க் நகர மரதன் ஓட்டப்போட்டியில் பங்கு கொண்ட கால் அகற்றப்பட்ட "டிக் ட்ரோம்" என்பவரின் கட்டுரையைப் படித்தார். அதை ஊக்கிவிப்பாக எடுத்து 14 மாதங்கள் மரதன் ஓட்டப் பயிற்சியில் ஈடுபட்டார். புற்றுநோய்க்கான வைத்திய சாலைகளில் ஒதுக்கப்படும் நிதிப்பற்றாக் குறையை எண்ணிக் கோவப்பட்ட அவர் அதற்கான நிதியினை சேகரிப்பதற்காகவும் புற்றுநோய் விழிப்புணர்வை சமூகத்தில் ஏற்படுத்துவதற்காகவும் கனடா நாட்டின் தூரத்தை மரதன் முறையில் ஓடிக் கடக்க தயாரானார். தனது இந்த முடிவை கனேடிய புற்றுநோய் தடுப்புச் சங்கத்திற்கு அறிவித்ததோடு பல முன்னனி நிறுவனங்களுக்கும் உதவும்படி கடிதங்கள் எழுதியுள்ளார்.

இந் நிறுவனங்களின் உதவியுடன் 1980ம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 12ம் திகதி நியூபவுனட் லான்டிலுள்ள சென்ற்ஜோன் என்ற இடத்தில் மரதன் ஓட்டத்தை ஆரம்பித்து, 8000 கி.மீற்றர் தூரத்தை கடந்து பிரிட்டி கொலம்பியாவின் விக்டோரியவில் முடிவுறுத்துவதாக தீர்மானித்தார். இதற்கமைய நண்பரான ஆல்வார்ட் வாகனத்தில் உதவியாக வர தனது மரதன் ஓட்டத்தை ஆரம்பித்து கடுமையான காற்று, பனி, மழை எனப்பல இன்னல்களுக்கு முகங்கொடுத்து தனது வெற்றிகர பயணத்தைத் தொடர்ந்தார். போகும் பாதைகளில் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த நிகழ்ச்சிகளிலும் கூட்டங்களிலும் பங்கு பற்றி புற்றுநோய் விழிப்புணர்வை ஏற்படுத்தினார்.

இருதய நோயும், புற்று நோயின் தீவிரமும் செயற்கைக்காலின் ஒவ்வாமையும் அவரின் மரதன் ஓட்டத்திற்கு பாதகமாயின. ஓகஸ்ட் மாத இறுதியில் அவர் முச்சுதிணறல் மற்றும் நெஞ்சுவலியால் ஓட்டத்தைத் தொடர முடியாத நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். நோயின் தீவிரத்தால் 1980ம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 02ம் திகதி தனது முயற்சியை கைவிடுவதாக அறிவித்தார். அது வரையில் 143 நாட்களாக 5373கீ.மீ (3339மைல்கள்) தூரத்தை ஓடிக் கடந்து 23 மில்லியன் டொலர்களையும் சேகரித்துள்ளார்.

நாளாந்தம் நோயின் பாதிப்பு அதிகரிக்கவே மீண்டும் றோயல் கொலம்பியன் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட போது கோமா நிலையில் இருந்தார். 1981ம் ஆண்டு ஜுன் மாதம் 28ம் திகதி அதிகாலை நேரம் அவர் உயிர் பிரிந்தது. கனேடிய பாராளுமன்ற அமர்வில் பேசிய அப்போதேய பிரதமர் ட்ரூடோவும், மற்றும் அனைத்து மக்களும் டெர்ரியின் மறைவுக்காக வருத்தம் தெரிவித்தனார். அவரது இறுதி நிகழ்வுகள் தேசிய தொலைக்காட்சியில் ஒளிபரப்பப்பட்டது. அவரை ஒரு தேசிய வீரனாக அங்கிகரித்த கனேடிய அரசு அவரின் ஞாபகமாக விளையாட்டுப் போட்டிகளை இன்றும் நடாத்தி வருகின்றது.

## வில்மா ரூடோல்ப்

**வலு – 03**




அமெரிக்காவின் டெனிசி மாநிலத்திலுள்ள பெத்லேஹெம் என்ற இடத்தில் 1940 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 23ஆம் திகதி ஆபிரிக்க அமெரிக்க இனத்தைச்சேர்ந்தவர்களான எட் ரூடோல்ப் பிளாஞ்சி தம்பதியினருக்கு வில்மா ரூடோல்ப் பிறந்தார். இவருக்கு நான்கு வயதாக இருக்கும் போது போலியோவும் செங்கண்மாரி நோயும் இரட்டித்த நிமோனியாவும் தாக்கியது. அதனால் அவரது கால்கள் தளர்ந்து விட்டதோடு இடது கால் முறுகித் திரும்பி ஊனமாகி விட்டது. அவர் பெற்றோர்கள் அவரை "மெஹிரி மருத்துவக் கல்லூரியைச் சேர்ந்த ஒரு மருத்துவ நிபுணரிடம் கொண்டு சென்றனர். அங்கு இருவருடங்களுக்கு சிகிச்சைகள் செய்தால் கால்கள் வலுப்பெறும் என்று கூறினர். அத்தோடு மீண்டும் சுயமாக நடப்பது என்பது முடியாது என்றும் கோல்களின் உதவியோடு நடக்க வைக்கலாம் என்றும் கருதிய மருத்துவர்கள் அவருக்கு ஐந்து வயதான போது இடது காலுக்கு இரும்பினாலான தாங்கும் கருவியை பொருத்தி விட்டனர். இதை விரும்பாத வில்மா வீட்டில் பெற்றோர் இல்லாத நேரங்களில் அந்த கவசத்தை கழற்றி விட்டு சிறிது சிறிதாக முயற்சி செய்து நடக்க தொடங்கினார்.

கிளார்க் வில்லி என்ற இடத்திலுள்ள கொப் ஆரம்ப பாடசாலையில் இரண்டாம் வகுப்பில் 1947ஆம் ஆண்டு வில்மா சேர்க்கப்பட்டார். வில்மாவின் விடா முயற்சியும் குடும்பத்திரனரின் ஊக்கமும் இவரை பதினொரு வயதில் நடக்க மட்டுமல்லாது வேகமாக ஓடவும் வைத்தது. 12 வயதில் சிறந்த ஓட்டவீராங்கனையாக திகழ்ந்தார். இது பற்றி வில்மா " வைத்தியர்கள் நான் நடக்க இயலாது எனக் கூறினார்கள், எனது தாயாரோ நீ நன்றாக நடப்பாய் என்றார்கள். நான் எனது தாயின் வார்த்தைகளில் நம்பிக்கை வைத்தேன்" என்கின்றார். எனது நம்பிக்கை வீண்போகவில்லை" என பின்னாளில் தனது சுயசரிதையில் குறிப்பிட்டுள்ளார். ஏழாம் வகுப்பில் பேர்ட் உயர் கல்லூரியில் சேர்ந்தார். இங்கு ஒன்பதாம் வகுப்பு வரை கூடைப்பாந்தாட்டம் விளையாடினார். இதில் தனது இரண்டாவது வருடத்தில் 25 போட்டிகளில் 803 புள்ளிகளைப் பெற்று மானில அளவில் சாதனை படைத்தார். இது மட்டுமல்லாது இவர் சிறந்த தடகளப் போட்டி விராங்கனையாவார்.

டெனெசில் பல்கலைக்கழகத்தில் கனிஷ்ட பாடசாலையில் உடற்கல்வி மற்றும் உளவியல் ஆகியவற்றை பிரதான துறையாகக் கொண்டு கல்வி கற்றார். வில்மாவின் திறமைகளைக் கண்ட டெனெசி அரசாங்க பல்கலைக்கழகத்தின் பயிற்சியாளரான எட்டெம்பிள் என்பவர் இவரை ஒலிம்பிக் போட்டியில் வெற்றியாளராக்க விரும்பினார். இதற்கான பயிற்சிகளைப் பெற்ற வில்மா 1956ம் ஆண்டு அவுஸ்ரேலியாவில் நடந்த ஒலிம்பிக் போட்டியில் பங்கு பற்றி 4×100 மீற்றர் அஞ்சல் ஓட்டப் போட்டியில் வெண்கலப் பதக்கத்தை வென்றார்.

1960ஆம் ஆண்டு இத்தாலியின் ரோம் நகரில் நடைபெற்ற ஒலிம்பிக் போட்டியில் 100 மீற்றர், 200 மீற்றர், ஓட்டப் போட்டிகளிலும் 4×100 மீற்றர் அஞ்சல் ஓட்டப் போட்டியிலும் முதலிடங்களைப் பெற்று ஒலிம்பிக்கில் மூன்று தங்கப்பதக்கங்களை வென்ற சாதனையாளர் என்ற பெருமையைப் பெற்றார். அமெரிக்கா சார்பில் பெண் ஒருவர் ஒரே ஒலிம்பிக் போட்டியில் மூன்று தங்கப்பதக்கங்களை பெற்றமை இதுவே முதற்தடவையாகும். அப்பொழுது அமெரிக்கா ஜனாதிபதியாக இருந்த ஜோன் எப். கெனடி வில்மாவை வெள்ளை மாளிகைக்கு அழைத்து பாராட்டினார். 1961 இல் இவருக்கு அமெரிக்காவின் சல்லிவான் விருது வழங்கப்பட்டது.

டெனெசி பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்ற வில்மா. இரண்டாம் நிலை ஆசிரியராகவும், பெண்களுக்கான தடகளப் பயிற்சியாளராகவும், அவர் கற்ற கோப் கனிஷ்ட பாடசாலையில் பணியாற்றினார். 1967 இல் அன்றைய அமெரிக்க உப ஜனாதிபதியின் "Operation Champion" என்ற ஒரு நிகழ்ச்சித்திட்டத்திலும் பணியாற்றினார். இது திறமையான விளையாட்டு வீரர்களை வெளிக்கொண்டுவரும் ஒரு முயற்சியாகும். இதன் பின் பல்ஷாம் நிலைக் கல்லூரியில் பணியாற்றினார். 1994 நவம்பர் மாதம் 12 திகதி மூளையில் ஏற்பட்ட புற்றுநோய்த் தாக்கத்தின்

காரணமாக நாஷ்வில்லி என்ற இடத்தில் காலமானார். இவரது உடல் ஒலிம்பிக் கொடியினால் போர்த்தப்பட்டு அடக்கம் செய்யப்பட்டது.

## கிறீஸ்டி பிரவுண் (Christy Brown)

## வலு- 04



அயலாந்தின் தலை நகரான டப்லின் நகரின் புறநகர் பகுதியான கிறம்லினில் 1932ஆம் ஆண்டு ஜூன் 05ஆம் திகதி பிரிஜெட் தம்பதியினருக்கு பிரவுண் மகனாகப் பிறந்தார். குழந்தையாக இருந்த போது பிரவுணின் நடவடிக்கைகள் சாதாரணமாக இல்லாததினால் பெற்றோர் அவரை வைத்தியரிடம் அழைத்துச் சென்றனர். அங்கு மேற்கொள்ளப்பட்ட பரிசோதனை முடிவுகள் அவருக்கு பிறக்கும் போதே மூளை முடக்கு வாதத்தினால் பாதிக்கப்பட்டிருந்தமை தெரியவந்தது. இதனால் பாரிச வாத நோய் இருப்பது மட்டுமல்ல அவர் மூளை வளர்ச்சி குன்றியவராகவும் இருப்பார் என அறிவித்தனர்.

பிரவுணுக்கு 5 வயதாக இருந்த வேளையில் ஒரு நாள் பக்கத்திலிருந்த சகோதரியின் கையிலிருந்த வெண்கட்டியை இடதுகாலால் தட்டிப் பறித்து கால் விரல்களுக்கு இடையில் அதை வைத்து எழுத முயற்சித்தார். இதைக் கண்ட தாயார் பின்பு தனது விடாமுயற்சியினால் எழுத்துக்களை அறியவும், வாசிக்கவும் கற்றுக்கொடுத்தார். தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட சிகிச்சை மூலம் ஏனைய உடல் இயக்கத்திலும் பேச்சிலும் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டது. அப்பொழுது சமூக சேவையில் ஈடுபட்டிருந்த கற்றியோனா டெலா என்ற பெண்மணி பிறவுணை அடிக்கடி பார்க்க வருவார். வரும் போது படிக்க புத்தகங்களையும், ஓவியம் வரைவதற்க்கு தேவையானவற்றையும் கொண்டுவந்து கொடுப்பார். கால்களினால் நன்கு எழுதவும், கற்பனைக்கு எட்டியதை வரையவும் செய்தார். சில ஆண்டுகளில் இவர் ஒரு தீவிர ஓவியராகவே மாறியிருந்தார்.

பிரவுண் சார்ள்ஸ் டிக்கின்ஸ் இன் எழுதிய எழுத்துக்களை அதிகம் வாசிப்பார். தானும் அப்படி எழுத நினைத்தார். அப்போது புனித பெனடிக்ற் போதானா சிகிச்சை நிலையத்தில் கடமையாற்றிய டாக்டர் றொபேர்ட் கொலிஸ் என்பவருடன் பழக்கம் ஏற்பட்டது. அவர் பிறவுணுக்கு நன்றாய் எழுதுவதற்கு பயிற்சி கொடுத்தார். இதன் பின் பிறவுண் பல கட்டுரைகளையும், கவிதைகளையும் எழுதினார். இவரின் எழுத்துக்களுள் புகழ் பெற்றது “எனது இடது கால்” என்ற சுயசரிதை ஆகும். இது பின்பு 1970 ஆம் ஆண்டு “டவுன் ஆல் த டேயிஸ்” (Down All The Day) என்ற நாவலாக எழுதப்பட்டது. இந்த நாவல் விற்பனையில் சாதனை நிகழ்த்தி உலகச்சிறப்புப் பெற்றதுடன் 14 மொழிகளிலும் மொழி பெயர்க்கப்பட்டது. இவரின் “A Shadow On Summer” என்ற நாவலும் சிறப்பானது. மேலும் சில நாவல்களையும் எழுதினார். இவரின் கவிதைத் தொகுப்பான “ Come Softly To My Wake” என்பது இவரின் பெயரால் அமெரிக்க நாட்டில் வெளியீடு செய்யப்பட்டது. மேலும் இவரது மூன்று கவிதைகளின் தொகுப்புக்களும் சிறந்த ஓவியங்களும் இவரின் பெயர் உலகறிய காரணமாயின. இவர் சிறந்த நாவலாசிரியராகவும், கவிஞராகவும், ஓவியராகவும் விளங்கினார்.

இவரின் வாழ்க்கையில் ஏற்பட்ட காதலும் திருமணமும் எதிர் பார்த்தளவு வெற்றியினைக் கொடுக்காமையினால் பிரவுனின் திறமைகள் மெல்ல மெல்ல குறையத் தொடங்கியது. வாழ்க்கையில் பல சிரமங்களை அனுபவித்த இவர் 49 வது வயதில் 1981ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 7ஆம் திகதி இரவு மூச்சுத்திணறல் ஏற்பட்டு மரணித்தார். அவர் மறைவுக்குப் பின்னர் 1982ஆம் ஆண்டு "A Promising Career" என்ற நாவலும் 1991 இல் அவரின் கவிதைத் தொகுப்பும் வெளியிடப்பட்டது. இவரின் வாழ்க்கை திரைப்படமாக்கப்பட்டது. இப் படம் பல விருதுகளைப் பெற்றது.

## அருணிமா சிங்ஹா

## வலு- 05



இந்தியாவின் உத்தரப்பிரதேசத்திலுள்ள அம்பேத்கார் நகரில் 1988ஆம் ஆண்டு அருணிமா சிங்ஹா பிறந்தார். இவர் மிகவும் சுறுசுறுப்பானவர். கரப்பந்தாட்டம், கால்ப்பந்தாட்டம் ஆகியவற்றில் இந்திய நாட்டின் தேசிய அணியிலும் இடம் பெற்றிருக்கிறார். அருணிமா 23 வயதை அடைந்த போது 2011ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 11 ஆம் திகதி அன்று இந்திய மத்திய தொழிற்றுறை பாதுகாப்புப் படையில் (CISF) சேர்வதற்கான பரீட்சையில் தோற்றுவதற்காக லக்னோ நகரிலிருந்து டில்லி செல்லும் பத்மாவதி எக்ஸ்பிரசில் பயணத்தினை மேற்கொண்டார். அவ் வேளையில் திடீரென ரயில்ப் பெட்டிக்குள் புகுந்த கொள்ளையர்கள் அருணிமாவின் கைப்பையையும், கழுத்திலிருந்த சங்கிலியையும் அபகரித்தது மட்டுமன்றி அவரை ரயிலிலிருந்து வெளியே தள்ளி விட்டனர். அப்போழுது அருகே வந்த ரயில் இவரின் கால்களின் ஏறியதால் இவரது கால்கள் பாதிக்கப்பட்டது. உடனே மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்ட போது அங்கு இவரது இடது கால் முழந்தாளுக்குக் கீழே நீக்கப்பட்டது. நான்கு மாதங்களின் பின் செயற்கைக் காலும் பொருத்தப்பட்டது. இந்நிலையில் இவரை சிலர் பரிதாபமாகப் பார்த்தனர். இது அருணிமாவிற்கு பிடிக்கவில்லை. இக் குறைபாட்டுக்குச் சவாலாக ஏதாவது சாதனை செய்ய நினைத்தார்.

ஒரு நாள் ரி.வி நிகழ்ச்சி ஒன்றில் "எவரெஸ்ட்" சிகரத்தில் ஏறுவது பற்றிய விளக்கச் சித்திரத்தை பார்த்த போது தானும் அதே போல செய்ய நினைத்தார். இம்முயற்சியில் ஈடுபட்ட அருணிமாவிற்கு வைத்தியர்களும் மூத்த சகோதரரும் ஆதரவு தெரிவித்தனர். அத்துடன் உத்தரகாசியிலுள்ள நேரு மலை ஏறும் பயிற்சி நிலையத்தில் இணைந்து அடிப்படை மலையேறும் தகுதினைப் பெற்றார். உத்தரகாசி டாட்டா ஸ்டீல் சாதனை அறக்கட்டளையின் கீழ் சுசென் மஹ்ரே என்பவரும், 2011ம் ஆண்டில் எவரெஸ்ட் சிகரத்தை தொட்ட பச்சேந்திரி பால் என்பவரும் மலையேற பயிற்சி வழங்கி வந்தனர். அங்கு 2012 ல் அருணிமா ஆரம்ப கட்டமாக 6150 மீற்றர் உயரமான ஜலண்ட் உச்சி வரை ஏறப் பயிற்சி பெற்றார். இதன் பின் ச்சாம்செர் என்ற மலையிலும் ஏறிப் பயிற்சி பெற்றார்.

அருணிமா 2013 ஏப்ரல் 01ம் திகதி அன்று எவரெஸ்ட் பயணத்தை தொடங்கினார். தன் உடல் வலிகளைத் தாங்கியவாறு கரடு முரடான பாதை வழியே கடுமையான குளிரின் மத்தியிலும் செயற்கைக் காலுடன் பயணித்து 2013 ம் ஆண்டு மே மாதம் 21 ம் திகதி காலை 10.55 மணிக்கு எவரெஸ்ட் சிகரத்திதைத் தொட்டார். உலகம் போற்றும் சாதனையாக, எவரெஸ்ட் சிகரம் தொட்ட முதல் பெண் மாற்றுத்திறனாளி என்ற பெயரை அருணிமா பெற்றார். இதனால் பல பரிசுகளையும், பாராட்டுக்களையும் பெற்றார்.

"மாற்றுத்திறனாளிகள் பலருக்கு என் வாழ்க்கை சாதிப்பதற்கான ஒரு உத்வேகமாக இருந்தால் அதுவே எனக்கு மன மகிழ்ச்சியைத் தரும் என்கிறார்" அருணிமா சின்ஹா.

## ஜெசிக்கா ஹொக்ஸ்

## வலு- 06



அமெரிக்காவின் அரிசோனா மானிலத்தில் 1983ம் ஆண்டு, பெப்ரவரி, 02 இல் ஜெசிக்கா பிறந்தார். இவர் பிறப்பிலையே இரண்டு கைகளையும் இழந்தவர் ஆவார். இவரின் நிலையைக் கண்ட பெற்றோர்கள் மனம் வருந்தினர். இதனை ஜெசிக்காவிடம் காட்டிக் கொள்ளாமலும், ஜெசிக்காவை துவண்டு போக விடாமலும், அவருக்கு பலமாக இருந்து அவர் செய்யும் எல்லா முயற்சிக்கும் முழு ஒத்துழைப்பையும் வழங்கினர்.

ஜெசிக்கா சிறுவயது முதல் காலினாலே எழுதுவது, போன் பேசுவது, பல் துலக்குவது என தன்னுடைய அனைத்து வேலைகளையும் தானே செய்யப் பழகினார். இவர் நடனம், உளவியல், இளமாணித்துறை என்பவற்றில் பட்டங்களைப் பெற்றுள்ளார். ஜெசிக்கா தன்னுடைய காரை காலினால் ஓட்டி அதற்கான அனுமதிப் பத்திரத்தைப் பெற்றுள்ளார். காரத்தேயில் கறுப்பு பட்டி பெற்றவர்.

ஜெசிக்கா ஒரு நாள் வெளியில் சென்று வானத்தில் பறக்கும் பறவைகளைப் பார்த்துக் கொண்டிருந்த போது அவற்றைப் போல தானும் பறக்க விரும்பினார். இக் கனவை யுத்த விமான பைலட் ஒருவரிடம் கூறினார். அவர் இவருக்கு உதவினார். சதாரணமாக ஒருவர் 3 அல்லது 6 மாதங்களில் முடிக்கக் கூடிய இந்தப் பயிற்சியை ஜெசிக்கா முடிக்க மூன்று வருடங்கள் எடுத்தது. விமானத்தை ஓட்டுவதற்கான நேர்முகத்தேர்வு 3பேர் கொண்ட குழவின் முன்னிலையில் நடாத்தப்பட்டது. அக்டோபர் 10.2008 இல் விமான ஓட்டுனர் உரிமம் வழங்கப்பட்டது. என்னை போன்றவர்களும் இவ்வாறான நிலைக்கு வர நான் ஒரு பயிற்றுவிப்பாளராக வரவேண்டும் என்பதே தனது இலட்சியம் என்கிறார் ஜெசிக்கா.

அத்தோடு என்னை மற்றவர்கள் அனுதாபப்பட்டு பார்ப்பதை ஏற்கமுடியாது. என்னையும் சதாரண பெண்ணாக மதித்து என்னுடன் சேர்ந்து வேலை பார்ப்பவர்களைத்தான் எனக்குப் பிடிக்கும் என்றும் அவர் கூறியுள்ளார்.

## நிக்கோலஸ் யேம்ஸ்வோயிச்சி

## வலு- 07




அவுஸ்திரேலியாவின் மெல்போன் நகரில் 1982 ம் ஆண்டு டிசெம்பர் மாதம் 4ம் திகதி நிக் கோலஸ் யேம்ஸ்வோயிச்சி பிறந்தார். இவர் தாயின் கருவில் இருந்த போது டெட்ரா அமெலி யாசின்ட்றோம் எனும் நோயினால் பாதிக்கப்பட்டார். இதனால் இரண்டு கால்களையும் கைகளையும் இழந்த நிலையில் பிறந்தார். இக் குழந்தையைக் கண்டு பெற்றோர்கள் எவ்வாறு வளர்ப்பது என தடுமாறினர். பின் இறைவன் ஏதோ ஒரு காரணத்திற்காகத்தான் இப் பிள்ளையைத் எமக்கு தந்திருக்கிறார் என உணர்ந்த அவர்கள் அவரை சிறந்த முறையில் வளர்க்க முடிவெடுத்தனர். இவரின் வலு இழப்பின் தன்மை ஆரம்பப் பள்ளியில் சேர்க்கத் தடையாக அமைந்தது. கால ஓட்டத்தில் ஏற்பட்ட சட்ட மாறுதல்களின் காரணமாக மனநலம் குன்றியோருடன் இணைந்து கல்வி கற்கும் வாய்ப்பினைப் பெற்றார். இவர் 7ம் வகுப்பில் மாணவத்தலைவனாக இருந்தார்.

நிக் தனது வேலைகளைத் தானே செய்ய பழகிக் கொண்டார். பல் துலக்க, ரம்பளரில் தண்ணீர் குடிக்க, முகச் சவரம் செய்ய, எழுத என அன்றாட வேலைகளை சில கருவிகளின் துணையுடனும் துணையின்றியும் தாமாகவே தனித்து செய்யக் கற்றுக் கொண்டார். அத்தோடு கணனியைச் செயற்படுத்துவது, டெனிஸ் பந்துகளைத் தூக்கி எறிவது, இசைக்கருவிகளை வாசிப்பது, தொலைபேசியை பயன்படுத்துவது என பலதையும் கற்றுக் கொண்டார்.

2005 ஆண்டு தனது தினசரி வாழ்வில் செய்யும் செயல்களை “Life’s greater purpose” என்ற குறும் படத்தின் மூலமாக வெளிக் கொணர்ந்தார். இதனது 2ம் பாகம் பிரிஸ்பேனில் உள்ள தேவாலயம் ஒன்றில் படமாக்கப்பட்டது. 2008ல் ‘‘திரம்டர்பிள்ளை’’, ‘‘சர்க்கஸ்’’ என்ற குறும்படங்களிலும் ‘‘டோர் போஸ்த’’, ‘‘மொத்தேட்பெஸ்’’ போன்ற திரைப்படங்களிலும் நடித்துள்ளரர். மற்றும் ‘‘சம்திங் மோர்’’ எனும் முதல் காணொலியை youtube ல் வெளியிட்டுள்ளார்.

நிக் அவுஸ்திரேலியாவின் உணர்ச்சிகரமான ஓர் பேச்சாளராவார். இவரது ‘‘No arms no legs no worries’’ ,‘‘Life without limits inspiration for a ridiculously good life’’ என்ற எழுத்துக்கள் உலகத்தவர்களினால் பெரிதும் மதிக்கப்படுகின்றது. நிக் 2011 ஜனவரியில் சுவிஸ்லாந்தின் கிரிபித் பல்கலைக்கழகத்தில் கணக்கியல் மற்றும் நிதியியல் பட்டங்களை இரட்டைப்பட்டங்களாகப் பெற்றார். 2005ம் ஆண்டு அந்த ஆண்டிற்கான ஆவுஸ்திரேலியாவின் சிறந்த நபருக்கான விருதையும் பெற்றுள்ளார். இவர் 2012 ஆண்டு பெப்ரவரி 12 ம் திகதி கானேமியாரா என்பவரைத் திருமணம் செய்தார். தற்போது மனைவி மக்களுடன் அமொரிக்காவில் வாழ்ந்து வருகிறார்.

**ஸ்டீபன் வில்லியம் ஹாக்கிங்**

**வலு- 08**



இங்கிலாந்தில் உள்ள ஆக்ஸ்போர்டில் 1942ம் ஆண்டு ஜனவரி மாதம் 08 ம் திகதி frank, isobel hawking தம்பதிகளுக்கு ஸ்டீபன் வில்லியம் ஹாக்கிங் பிறந்தார். இவர் கேம்பிறிச் பல்கலைக்கழகத்தில் கணிதத்திக்கான லுக்காசியன் பேராசிரியராக இருந்தார். ஸ்டீபன் 21 வயதாக இருந்த போது அவரை அமையோட்ரோபிக் லோட்டரல் ஸ்கவெல ரோசிஸ் எனும் நரம்பு நோயால் தாக்கியது. குணப்படுத்த முடியாத இந் நோயின் காரணமாக கை,கால் முதலிய உடல் இயக்கங்கள் பாதிக்கப்பட்டது. லூக்காசியன் பேராசிரியராகும் போது அவரால் நடக்க முடியாது. தானாகவே சாப்பிட முடியாது. கீழே சாயும் அவரது தலையை அவரால் உயர்த்தவும் முடியாது. இந்நிலையில் பேச்சு திறனும் குன்றியது. அவருக்கு மிகவும் நெருக்கமானவர்களால் மட்டும்தான் அவர் என்ன பேசுகிறார் என்பதைப் புரிந்து கொள்ள முடிந்தது. எனினும் கணனியின் ஊடாக மற்றவர்களுடன் தொடர்புகளை வைத்திருந்தார்.

ஸ்டீபனின் முக்கியமான ஆய்வுத்துறைகளாக அண்டவியல் மற்றும் குவாண்ட ஈர்ப்பு என்பன விளங்கின. கருங்குழியிலிருந்து ஒளியுட்பட எதுவுமே வெளியேற முடியாது என்று நம்பப்பட்டதற்கு மாறாக கருங்குழிகளில் இருந்து துணிக்கைகள் வெளியேறுகின்றன என்றும் இதனால் இவை காலப்போக்கில் இல்லாமல் போய் விடுகின்றன என்றும் ஆராய்ச்சிகள் மூலம் சுட்டிக்காட்டினார். இவ்வாறு வெளியேறும் கற்கைகளுக்கு ஹாக்கிங் கதிர்வீச்சு என்று பெயரிடப்பட்டது. இயற்பியல் அறிஞரான இவர், அண்டவெளியின் தோற்றம், தன்மை மற்றும் அதன் பரிணாம வளர்ச்சி என்பன பற்றி ஆராய்ந்து மகத்தான கண்டு பிடிப்புக்களை வெளியிட்டார்.

இவர் சாதரண மக்களும் விளங்கிக் கொள்ளும் வகையில நேரத்தின் ஒரு சுருக்க வரலாறு, கருங்குழிகள், குழந்தைப் பிரபஞ்சங்கள் போன்ற நூல்களை எழுதியுள்ளார். இவர் எழுதிய நூல்களில் நேரத்தின் ஒரு சுருக்க வரலாறு மற்றும் The universe in a nutshell ஆகிய இரு நூல்களும் உலகத்தவர்களின் மத்தியில் பெரு வரவேற்பை பெற்றதுடன் விற்பனையிலும் சாதனை நிகழ்த்தியது.

அமெரிக்க வெள்ளை மாளிகையில் 2009ம் ஆண்டு ஆகஸ்ட் 12ம் திகதி ஜனாதிபதி பராக் ஒபாமா தலைமையில் இடம் பெற்ற Future Of Humanity என்னும் நிகழ்வின் போது ஸ்டீபனுக்கு Presidential Medal Of Freedom என்ற விருது வழங்கப்பட்டது.

இவர் குவாண்டம் தொடர்பாகவும், கருந்துளைகள் தொடர்பாகவும் ஆய்வுகளை மேற்கொண்டு பல புதிய கண்டுபிடிப்புக்களை செய்து இதுவரை காலமும் நிலவி வந்த கருத்துக்களுக்கு மாறான சில புதிய தகவல்களைத் தந்துள்ளார். ஹாக்கிங் டைம் மெஷின் (Time Machine), பிளாக் ஹோல் (Black Hole), ஏலியன் (Alien), பிக்பேங் தியரி (Bigbang Theory) என அண்ட அறிவியலின் பல மைல்கல் ஆராய்ச்சிகளை மேற்கொண்டார்.

கல்லூரி காலத்தில் தன்னுடன் படித்த தோழி ஜேன் வைல்டை காதலித்துத் திருமணம் செய்து கொண்டார். 30 வருடங்கள் இருவரும் ஒன்றாக வாழ்ந்தனர். பின்னர், தன்னை கவனித்துக் கொண்ட செவிலியர் எலைனுடன் காதல் கொண்டு, அவரையும் திருமணம் செய்து கொண்டு பத்தாண்டுகள் அவரோடு வாழ்ந்தார்.

ஸ்ரீபன் இங்கிலாந்திலுள்ள கேம்பிரிட்ச்சில் 2018 ஆம் ஆண்டு மார்ச் 14ஆம் திகதி அன்று காலமானார். ஸ்டீபனின் பிள்ளைகளான லூசி, ராபர்ட், டிம் ஆகியோர் வெளியிட்ட செய்திக் குறிப்பில் “எங்கள் அன்புமிகு தந்தை காலமானார். அவர், பெரிய விஞ்ஞானி, அவரின் பெயரும் புகழும் காலம் கடந்தும் நிற்கும். அவருக்கு உறுதுணையாக இருந்த அனைவருக்கும் நன்றி என்று குறிப்பிட்டுள்ளனர்.

## சுதாச்சந்திரன்

## வலு- 09



இந்தியாவின் மும்பை நகரில் 1963ம் ஆண்டு புரட்டாதி மாதம் 21ம் திகதி சுதாச்சந்திரன் பிறந்தார். இவர் சிறுவயதிலே கல்வியிலும் பரத நாட்டியக்கலையிலும் சிறந்து விளங்கினார். இவர் இளமானி மற்றும், பொருளாதாரவியலுக்கான முதுமானிப் பட்டங்களையும் பெற்றுள்ளார்.

1981 ம் ஆண்டு புனித யாத்திரை மேற்கொண்ட பொழுது திருச்சிராப்பள்ளி அருகே இவர் பயணம் செய்த வாகனம் விபத்துக்குள்ளானது. இந்த விபத்தில் இவர் ஒரு காலை இழந்தார். இதனால் செயற்கைக் கால் பொருத்தப்பட்டது. இக் காலுடன் நடக்க மட்டுமல்ல நடனத்தினையும் கற்றுக் கொண்டார். 1984ம் ஆண்டு மயூரி என்ற தெலுங்கு திரைப்படத்தில் நடித்துள்ளார். தமிழில் விசால் நடித்த சத்தியம் மற்றும் ஆதிபகவன் உட்பட பல்வேறு படங்களிலும் நடித்துள்ளார். தற்போது சின்னத்திரைகளிலும் நடித்து வருகின்றார்.

விபத்தில் காலை இழந்த போதிலும் வலுவிழப்பை புறம் தள்ளி மிக சிறப்பாக நடனமாடி அனைவரையும் வியக்க தைத்துள்ளார்.

## லூடுவிக் வான் பேத்தேவன்

## வலு- 10



ஜேர்மனியின் பான் நகரில் ஜோகன் பேத்தேவன், மரியா மாக்டவேன் கவேரிச் தம்பதியினருக்கு 1770 ம் ஆண்டு லூடுவிக் பேத்தேவன் பிறந்தார். இசைக்கலைஞராகவும், இசை ஆசிரியராகவும் விளங்கிய தந்தையிடமிருந்து இசையினை முதலில் கற்றுக்கொண்ட லூடுவிக்கின் திறமைகள் நாளுக்குநாள் அதிகரித்தது. பின்னர் 1779ம் ஆண்டு லூடுவிக் கிறிஸ்டியன் கோட்லாப் நீ.்.ப் என்பவரிடம் இசை அமைத்தல் பற்றி கற்றுக் கொண்டார். இந்த ஆசிரியரின் உதவியுடன் 1783ல் தனது முதல் இசைப்படைப்பை வெளியிட்டார். லூடுவிக் பியானோ கருவிகளுக்காகவும், பிற இசை கருவிகளுக்காகவும் மற்றும் சேர்ந்திசை நிகழ்வுகளுக்காகவும், பல செவ்விசை ஆக்கங்களைச் செய்துள்ளார். இவருடைய 5வது, 9வது சிம்.்.பனி இசைகள் மிகவும் புகழ் பெற்றவை.

1796ம் ஆண்டு அதாவது 26 வயதில் லூடுவிக் தீவிரமான காதிரைச்சல் நோயினால் பாதிக்கப்பட்டு தனது கேட்கும் திறனை படிப்படியாக இழந்தார். உட்காதுகளில் ஏற்பட்ட நாட்பட்ட புண்ணே இப் பாதிப்பை ஏற்படுத்தியதாக மருத்துவப் பரிசோதனைகள் தெரிவித்தன. இக் குறைபாடு இவரை மனதளவில் பெரிதும் பாதித்தது.

போராட்டத்தின் மத்தியில் வாழ்க்கையைத் தொடர்ந்த இவர் 9வது ஒத்தினி இசையை வாசித்த போது, அவ்விசை இவர் காதுகளில் விழவில்லை. கண்களால் பார்த்துத் தான் பார்வையாளர்களின் ஆரவாரிப்புக்களையும் கை தட்டல்களையும் புரிந்து கொண்டார். இது இவருக்கு பெயரினையும், புகழினையும் தேடிக் கொடுத்தது.

லூடுவிக் திருமணமே செய்து கொள்ளவில்லை. கல்லீரல் நோயினால் பாதிக்கப்பட்ட இவர் தனது 56வது வயதில் அதாவது 1827 மார்ச் மாதம் 26ம் திகதி இடியுடன் கூடிய மழைப்பொழுதில் இவ்வுலகிற்கு விடை கொடுத்தார்.

ஜேர்மனியின் பான் நகரில் உள்ள அவரது வீடு தற்போது லூடுவிக் அருங்காட்சியமாக உள்ளது. இங்கே இவரது சில கையேடுகளும், அவர் பயன்படுத்திய சில கேட்கும் கருவிகளும் வைக்கப்பட்டுள்ளன. BBC தமிழ் வானொலியில் சிலகாலம் இவரது இசை செய்தி தொடக்க இசையாக இருந்தமை குறிப்பிடத்தக்கது.

## ஜோன் மில்டன்

## வலு- 11



இங்கிலாந்தின் லண்டன் நகரில் 1608ம் ஆண்டு டிசெம்பர் மாதம் 09ம் திகதி ஜோன் மில்டன் பிறந்தார். தனது ஆரம்பப் கல்வியை லண்டன் செயின்ட் பால்ஸ் பள்ளியில் பயின்ற இவர். 1625ல் கேம்பிறிச் பல்கலைக்கழகத்தோடு இணைந்த கிறிஸ்தவக் கல்லூரியில் கல்வியைக் கற்று 1632ல் தன் மேற் படிப்பிற்கான பட்டத்தினைப் பெற்றார். சிறு வயது முதலே புத்தகங்களைப் படிக்கும் ஆர்வம் கொண்ட மில்டன் தான் ஒரு எழுத்தாளனாக வர விரும்பினார். இவர் ஆங்கிலம், டச்சு, லத்தீன், கிரேக்கம், பிரெஞ்சு, இத்தாலி, யஹிப்ரு, ஸ்பானிஸ் போன்ற மொழிகளில் புலமை பெற்றுள்ளார்.

மில்டனுக்கு 32 வயதாக இருந்த போது அவரது கண் பார்வை படிப்படியாக குறையத் தொடங்கி, 1651ல் முற்றாக பார்வை இல்லாது போனது. திடீரென பார்வையை இழந்தமையினால் வாழ்க்கையின் மீது வெறுப்புக் கொண்ட இவர், பின்னர் அந்நிலையில்

இருந்து மீண்டு வாழக் கற்றுக்கொண்டார் என்பதனை இவர் எழுத்துக்கள் எமக்கு வெளிக்காட்டுகிறது.

ஆங்கிலக் கவிதை என்றதும் நினைவுக்கு வரும் ஒருவராகத் திகழும் இவர் இழந்த சொர்க்கம், (pardise lost) மீண்ட சொர்க்கம் எனப் பல கவிதைத் தொகுப்புக்களை எழுதி வெளியிட்டுள்ளார். கவிதைகளோடு நின்று விடாமல் அரசியலிலும் தனது எழுத்துக்களைப் பதிவு செய்தார். குடியாட்சியினை நேசித்த இவர் முடியாட்சிக்கு எதிராக பல ஆக்கங்களை எழுதினார். இது பலரது வரவேற்பை பெற்றதோடு குடியாட்சியின் உதயத்திற்கும் காரணமானது. குரொம் வெல் தலைமையில் அமைக்கப்பட்ட அமைச்சரவையில் அயல் நாட்டு மொழிகள் சம்பந்தப்பட்ட துறையில் செயலாளராகவும் பணியாற்றினார்.

மில்டன் 1642ம் ஆண்டு மெரிபவல் என்ற பெண்ணைத் திருமணம் செய்தார். இவர்களுக்கு நான்கு பிள்ளைகள் பிறந்தன. 1652ல் மெரிபவலின் மறைவினைத் தொடர்ந்து 1656ல் கதிரின் வூட்கொக் என்பவரை மறுமணம் செய்தார். இவர் 1658ல் மரணம் அடைந்தமையினால் 1662ல் எலிசபத் மில்லூல் என்பவரை மறுமணம் செய்து வாழ்ந்தார். 1674 நவம்பர் 08ல் ஜோன் மில்டன் இவ்வுலகை விட்டு மறைந்தார்.

## டெரன்ஸ் பார்கின்

## வலு- 12



தென்னாபிரிக்காவில் 1980ம் ஆண்டு பிறந்தவர் தான் டெரன்ஸ் பார்கின். இவர் செவிப்புல வலு இழந்தவர் ஆவார். இவர் சிறு வயது முதலே நீந்துவதில் ஆர்வம் உடையவராக இருந்தார். 14 வயது முதல் நீச்சல் பயிற்சிகளில் ஈடுபட்டார். தன்னுடைய குறைபாடு தன் வெற்றிக்குத் தடையாக அமைந்து விடக்கூடாது என நினைத்து மனஉறுதியுடன் கடுமையாகப் போராடினார்.

நீச்சல் போட்டிகளில் கலந்து கொள்ளும் போது, போட்டி ஆரம்பிக்க ஒலிக்கும் அடையாளச் சத்தத்தினை இவரால் கேட்க முடியாது. அதற்காக தன் உடலில் ஒரு மின் அணுக்கருவியினை பொருத்தி அதன் ஊடாக கமராவில் ∴ப்ளாஸ்லைட் உருவாவது போலான ஒளியினை தனது கண்களுக்கு ஏற்படச் செய்து அதன் மூலம் போட்டியின் ஆரம்பத்தை உணர்ந்து கொண்டு போட்டியினை ஆரம்பிப்பார்.

ஆபிரிக்காவில் இடம் பெற்ற 3 நீச்சல் போட்டிகளில் பங்கு பற்றி வெற்றி பெற்ற இவர் "ஹார்ட் கோக்ஸ் வேர்ல்ட் சம்பியன் ஷிப்" போட்டிகளில் 2 தங்கப்பதக்கங்களை பெற்றுள்ளார். அவுஸ்ரேலியாவின் சிட்னி நகரில், 2000ம் ஆண்டு நடைபெற்ற ஒலிம்பிக் போட்டியில் தென்னாபிரிக்காவின் சார்பாக கலந்து கொண்டு 200 மீட்டர் நீச்சல் போட்டியில் வென்று டெரன்ஸ் வெள்ளிப் பதக்கத்தைப் பெற்றுக் கொண்டார். இவ்வாறு டெரன்ஸ் பார்க்கின் பல பதக்கங்களைப் பெற்று தனது வலு இழப்பைப் பின் தள்ளி உலகத்தவர் பார்வையில் முன்னிலை பெற்றுள்ளார்.

## நோலியா கரெல்லா

## வலு- 13



ஆர்ஜென்டினாவைச் சேர்ந்த நோலியா கரெல்லா என்பவர் பிறக்கும் போதே உளசார் குறைபாடுகளுள் ஒன்றான மனநலிவு எனப்படும் டவுண் சிண்ட்ரோம் நோயினால் பாதிக்கப்பட்டிருந்தார். இதனால் இவரது பெற்றோர்கள் இக் குழந்தையை ஆரம்பப் பள்ளியில் சேர்ப்பதற்கு பெருமளவு போராட வேண்டியிருந்தது. இவர்களது போராட்டத்தின் பயனாக ஒரு பள்ளியில் சேர்க்கப்பட்ட நோலியா தன் கடின பயிற்சியினாலும் முயற்சியினாலும் 25 வருடங்கள் பயணித்து 2012ல் டவுண் சிண்ட்ரோம் குழந்தைகளுக்கு பாடம் கற்பிக்கும் ஓர் ஆசிரியராக வெளிவந்தார். இவரே உலகின் முதலாவது டவுண் சிண்ட்ரோம் எனப்படும் மனநலிவுக் குறைபாடுடைய ஆசிரியர் என்ற பெருமையை பெற்று சாதனை படைத்துள்ளார்.

நோலியா கரெல்லா 32 வயதில் இது பற்றிக் கூறும் போது “ எனக்குச் சின்ன வயதிலேயே ஆசிரியர் வேலை பிடிக்கும் அதனால் நான் ஒரு ஆசிரியராக வேண்டும் என்று ஆசைப்பட்டேன் அந்த ஆசை இப்போது நிறைவேறியுள்ளது. என்கிறார்.

இவர் 3வயதிற்கு மேற்பட்ட டவுண் சிண்ட்ரோம் குழந்தைகளுக்கு பேசும் பழக்கத்தை ஏற்படுத்தும் ஆசிரியராகப் பணியாற்றுகின்றார். இவரை பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், மற்றும் மாணவர்களின் பெற்றோர் என அனைவரும் பாராட்டி உற்சாகப்படுத்துகின்றனர். நோலியா இதன் மூலம் மனநலிவுக் குறைபாடு உடையவர்கள் தொடர்பான அபிப்பிராயம் சமூகத்தில் மாறி வருவதையிட்டு தான் மகிழ்வதாக கூறுகிறார்.

## டெம்பிள் கிராண்டின்

### வலு- 14



அமொரிக்காவின் பொஸ்டன் நகரில் றிச்சாட் கிராண்டின், அனா ஸ்ராசியா பேப்ஸ் தம்பதியினருக்கு 1947ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 29 ம் திகதி டெம்பிள் கிராண்டின் பிறந்தார். கொலராடோ பல்கலைக்கழகத்தில் விலங்கியல் துறை பேராசிரியராக பணியாற்றி வரும் இவர் விலங்கு வளர்ப்புத் தொடர்பான பல்வேறு ஆலோசனைகளை வழங்கி வருகிறார். மேலும் தனது பேச்சினூடாகவும் எழுத்தினூடாகவும் ஓட்டிசம் தொடர்பான விழிப்புணர்வை சமூகத்தின் பார்வைக்கு கொண்டு வருகிறார். 2010ம் ஆண்டு ரைம்ஸ் பத்திரிகை சிறந்த 100

மனிதர்களைத் தெரிவு செய்த போது அதில் ஒருவராக இவர் தேர்ந்தெடுக்கப்பட்டு கௌரவிக்கப்பட்டார். 2011ம் ஆண்டு இரட்டை கெலிக்ஸ் பதக்கங்களை பெற்றுள்ளார். 2015ல் தொழில்நுட்ப தொடர்பாடலின் கௌரவப்பிரயையாகத் தெரிவுசெய்யப்பட்டார்.

டெம்பிள் கிராண்டின் இரண்டு வயதில் ஓட்டிச பாதிப்புக்கு உள்ளாகியிருந்தார். எனினும் இவரது தாயார் டெம்பிள் கிராண்டினுக்கு 15 வயதாக இருக்கும் போது அமெரிக்க உளவியல் நிபுணரும் ஓட்டிச ஆராய்ச்சி நிறுவனத்தின் ஸ்தாபகருமான வைத்திய கலாநிதி பேனாட் றிம்லான்ட் அவர்களால் வழங்கப்பட்ட படிவத்தைப் பூர்த்தி செய்த போது தான் தன்மகளுக்கு ஓட்டிசப்பாதிப்பு இருப்பதாக தெரிந்து கொண்டார். இருப்பினும் இது 40 வயதில் தான் உறுதி செய்யப்பட்டது. டெம்பிளின் குடும்பம் நிதி வசதி மிக்கதாக இருந்தமையால் தாயார் இவருக்கு இரண்டரை வயதாக இருக்கும் போது பேச்சுப்பயிற்சிக்கும், 3 வயதாக இருக்கும் போது சேர்ந்து விளையாடுவதற்கும் உதவியாளர்களை நியமித்தார். பெற்றோரின் தொடர்ச்சியான கவனிப்பும், ஆசிரியர்களின் அரவணைப்பும் கிடைத்தமையினால் டெம்பிள் 4 வயதில் பேசத் தொடங்கினார்.

இவரது தாயார் Dedham Country day school பாலர் பாடசாலையில் தனது மகளுக்கு ஏற்றவகையிலான ஆசிரியர் ஒருவரை நியமித்தார். அந்த ஆசிரியரது அர்ப்பணிப்பான செயற்பாடு டெம்பிளின் கல்வி வளர்ச்சிக்கு காரணமாயிற்று. சிறுவயதில் தனது செயற்பாடுகளின் மூலம் அடைந்த அவமானங்களையும் அப்படி நடந்து கொண்டமைக்கான காரணங்கள் பற்றியும் பின்னாட்களில் டெம்பிள் கூறியது ஓட்டிசத்தின் பிடியில் இருக்கும் குழந்தைகள் தொடர்பான உலகத்தின் பார்வையை மாற்றியது எனலாம்.

மவுன்ரின் கன்றி பாடசாலையிலும், Frankin pierce college லும் கல்வி கற்ற டெம்பிள் 1975ல் Arizona State University யில் விலங்கியல் விஞ்ஞானத்துறையில் மாஸ்டர் டிகிரி பட்டத்தினையும், 1989 ம் ஆண்டு University of lllinois at Urbna- Champaign ல் விலங்கியல் விஞ்ஞானத்துறைக்கான கலாநிதிப்பட்டத்தினையும் பெற்றுள்ளார். மேலும் Carneg-ie Mellon University (2012), Mcgill University in Canada(1999), Swedish University of Agricultural Sciences(2009), Emory University(2016) ஆகிய பல்கலைக்கழகங்கள் இவருக்கு கௌரவப்பட்டங்களை வழங்கியுள்ளன. இவர் விலங்கியல்துறையில் முனைவர் பட்டமும் பெற்றுள்ளார்.

ஓட்டிசக் குழந்தைகளின் உணர்வுத் திறன் பிரச்சினைகளுக்கு ஓரளவு தீர்வு காணும் வகையில் டெம்பிள் ஹக் மெசினை அறிமுகம் செய்தார். இது தவிர இக் குழந்தைகளின் முன்னேற்றத்திற்காக ஆசிரியர்களையும் உருவாக்கியுள்ளார். இவர் சிறந்த பேச்சாளர் மட்டுமன்றி எழுத்தாளராகவும் விளங்குகின்றார். ஓட்டிசம் தொடர்பாக இவர் எழுதிய Thinking in pictures, The Autistic Brain என்ற நூல்களும், விலங்கியல் தொடர்பாக எழுதிய Live stock Handling and Transport நூல்களும் சிறப்பானவை.

## பேராசிரியர் டாக்டர் கே.எம்.பிரபு

### வலு- 15



இந்தியாவின் ஈரோடு மாவட்டம் கேசரிமங்கலத்தைச் சேர்ந்தவர் டாக்டர் கே.எம்.பிரபு ஆவார். இவர் சிறுவயதினிலேயே பார்வைப் பிரச்சினையால் பாதிக்கப்பட்டு இருந்தார். நாளடைவில் இவரின் பார்வை சிறிது சிறிதாகக் குறையத் தொடங்கியது. இவர் 10ம் வகுப்பு படிக்கும் காலத்தில் பெருமளவு பார்வையை இழந்தார். கல்லூரி படிக்கும் காலத்தில் முற்றாகப் பார்வையை இழந்தார்.

சென்னை கிறிஸ்தவக் கல்லூரியில் ஆங்கில இலக்கியத்தினைக் கற்று பி.எச்.டி பட்டத்தினைப் பெற்றார். தொடர்ந்து அரச கலைக்கல்லூரி ஒன்றில் பேராசிரியராகப் பணிபுரிந்தார். இவர் 2007ல் அரியானாவிலுள்ள பி.பி.எஸ் மகளிர் பல்கலைக்கழகத்தில் ஆறு ஆங்கில மொழி ஆய்வகங்களை உருவாக்கி 3400 மாணவிகளுக்கு ஆங்கில மொழி பேசும் திறனை வளர்க்க உதவினார். இது அவரது சாதனை ஆகும். சென்னை நந்தவனம் கலைக்கல்லூரியில் இணைப் பேராசிரியராகவும், துணைத்தலைவராகவும் இருந்த இவர், 2011ம் ஆண்டு ஜூன் மாதம் திருப்பூரிலுள்ள சிக்கன்னா அரசு கலைக்கல்லூரியில் முதல்வராக நியமனம் பெற்றார். இதனால் தமிழ் நாட்டின் முதல் பார்வையற்ற கல்லூரி முதல்வர் என்ற பெருமையை பெற்றுள்ளார்.

இவர் தனது செல்போனில் நவீன தொழில் நுட்பத்தை பயன்படுத்தி மாணவர்களுக்கு பாடங்களை கற்பித்தார். இவரின் கற்பித்தல் செயற்பாடுகளுக்கு சக பேராசிரியர்கள், நண்பர்கள், குடும்பத்தினர்கள் அனைவரும் உதவினர். மாற்றுத்திறனாளிகளுக்கும் சமவாய்ப்பு வழங்கப்பட வேண்டும் என்ற கொள்கையின் அடிப்படையில் தமிழக அரசு என் பணி மூப்பை கருத்திற் கொண்டு முதல்வராக பணி நியமனம் செய்தமைக்காக நன்றிகூறுகிறார் டாக்டர் கே.எம்.பிரபு.

## பிரபு டேவிட் பிளங்கற்

## வலு- 16




பிரித்தானியாவின் யோர்க்சஷயரின் தெற்கு பிராந்தியத்திலுள்ள செஷபீல்ட் நகரத்தில் 1947ம் ஆண்டு ஜூன் மாதம் 06ம் திகதி பிரபு டேவிட் பிளங்கற் பிறந்தார். ஏழ்மையான குடும்பத்தில் பிறந்ததினாலும், தந்தையின் மரணத்தினாலும், பார்வை இழப்பினாலும், சிறு வயதினிலேயே பல இன்னல்களுக்கு முகம் கொடுத்தார். ஆரம்ப கல்வியினை கண்பார்வை இழந்தோருக்கான

பாடசாலையில் பயின்றார். பின்னர் இவர் உயர் கல்லூரியில் பயின்ற போது பல அவமானங்களை சந்தித்தார். பார்வையை இழந்தவர்கள் கல்வி நிலையில் உயர்வடைவது அக் கால சமூகத்தில் அரிதாக இருந்தமையும், விழிப்புலனற்றோர் தொடர்பான விழிப்புணர்வின்மையும் அவரின் அவமானத்திற்கு காரணமானது. சிறந்த பேச்சாளரான இவர், சேஷபீல்ட் பல்கலைக்கழகத்தில் அரசியல் துறைக்கான பட்டதினைப் பெற்றுள்ளார்.

அரசியல் வாழ்க்கையில் தன்னை ஈடுபடுத்திக் கொண்ட இவர் 22ஆவது வயதில் (1970 - 1988) செஷபீல்ட் நகர கவுன்சிலராகவும், அதன் தலைவராகவும் சேவையற்றினார். அவ்வேளையில் தேசிய எக்ஸிகியூட்டிவ் குழுவிற்குத் தெரிவாகினார். டேவிட் பிளங்கற் 1987ல் தனது சொந்த ஊரில் போட்டியிட்டு பெரும்பான்மை வாக்குகளால் வெற்றி பெற்று பாராளுமன்ற உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டார். 1992ல் நிழல் அமைச்சரவையில் இணைந்த இவர் 1994ல் நிழல் சுகாதாரச் செயலாளராகி, அதே ஆண்டு நிழல் கல்விச் செயலாளராக பதவி உயர்வு பெற்றார். 1997ல் பிரிட்டனில் கல்வி, தொழில் வாய்ப்புக்கான இராஜாங்க அமைச்சராக நியமிக்கப்பட்ட போது, பார்வையற்ற மாற்றுத்திறமை கொண்ட முதல் பிரித்தானிய அமைச்சர் என்ற புகழைப் பெற்றார். 2001ம் ஆண்டு இடம் பெற்ற பொதுத் தேர்தலில், தொழில் கட்சி மீண்டும் வென்ற போது உள்துறை அமைச்சின் செயலாளராக பதவி உயர்வு பெற்றார். 2005ல் கிடைத்த தேர்தல் வெற்றி தொழில், ஓய்வூதியத் திணைக்களத்தின் இராஜாங்க செயலாளர் பதவியை இவருக்குப் பெற்றுக் கொடுத்தது. இப் பதவிக்காலத்தில் வெளி வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தார் என்று ஊடகங்கள் செய்திகளை வெளியிட்டதனைத் தொடர்ந்து தன் பதவியை இராஜிநாமா செய்தார். பின்னர் 2005 நவம்பர் 25 அன்று அமைச்சரவை செயலாளர் வெளியிட்ட உத்தியோக பூர்வ அறிக்கையில் டேவிட் கைகள் கறைபடியாதவை என்பதை உறுதிப்படுத்தியது.

இவர் கல்வித்துறையின் வளர்ச்சிக்கும், பிள்ளைகளின் நல்லொழுக்கத்திற்கும் பெருமளவு பங்களிப்புச் செய்துள்ளார். “நிச்சய ஆரம்பம்” என்ற பெயரில் திட்டம் ஒன்றினை ஆரம்பித்து ஆரம்பக் கல்வி முதல் பல்கலைக்கழகம் வரை கல்வியில் முன்னேற்றத்தைக் காண்பித்தார். இவர் குடியுரிமைக் கல்வியை கட்டாயப்படுத்தினார். பின்நாட்களில் பார்வை இழந்தோருக்கான அரச தேசிய நிலையத்தின் உப தலைவராகவும், தேசிய அல்ஸ்ஹய்மர் அமைப்பின் உப தலைவராகவும் பணியாற்றினார்.

## ஜான்.ஃ.போர்ப்ஸ் நாஷ் ஜூனியர்

## வலு- 17



அமெரிக்க கணிதமேதையான ஜான்.ஃ.போர்ப்ஸ்நாஷ் ஜூனியர் என்பவர்தான் கணிதத்தின் கிளைத்துறையான ஆட்டக் கோட்பாட்டினைக் கண்டறிந்தார். இது சமூக அறிவியல், பொருளியல், உயிரியல், பொறியியல், அரச அறிவியல், சர்வதேச உறவுகள், கணிப்பொறி அறிவியல், மற்றும் தத்துவம் என பல துறைகளிலும் பயன்படுத்தப்படுகிறது. இன்றும் சந்தைப் பொருளாதாரம், கணிப்பியல், செயற்கை நுண்ணறிவு, கணக்குப்பதிவியல், அரசியல், படைக்களக் கோட்பாடுகள் போன்றவற்றிற்கு பயன்படுகிறது. இது மிகவும் புகழ் பெற்ற கணித ஆய்வு உட்பொதிவுத் தோற்றமாகும். மேலும் இவர் நேரற்ற பரவளையப்பகுதி, வகைக்கெழு சமன்பாடு, தனிவழுக்கொள்கை ஆகியவற்றிற்கும் பெரிதும் பங்களிப்புச் செய்துள்ளார்.

1945ம் ஆண்டு உயர் நிலை படிப்பை முடித்த இவர், பென்சில் வேனியாவில் பிட்ஸ் பார்க்கில் உள்ள கார்னிகி மெலன் பல்கலைக்கழகத்தில் வேதிப்பொறியியல் மற்றும் வேதியியல் படித்தார். அங்கு 1948ம் ஆண்டு இளங்கலை மற்றும் முதுகலைப் பட்டங்களைப் பெற்றார். நாஷ் பிரின்ஸ்டன் பல்கலைக்கழகத்தில் முதுகணித ஆய்வாளராகப் பணியாற்றும் போது 1994ம் ஆண்டு பொருளாதாரத்திற்கான நோபல் பரிசை ரெயின் ஹார்ட் செல்டன் மற்றும் ஜான் ஹர்சான்யி ஆகியோருடன் பகிர்ந்து கொண்டார். இதுதவிர 1978ம் ஆண்டு இவர் கண்டுபிடித்த ஒத்து சாரா சமநிலைக்காக (நாஷ் சமநிலை) ஜோன்வான் நியூமன் தத்துவப் பரிசும், 1999ல் லியோரிபி ஸ்டீல் பரிசும் கிடைத்தது.

நாஷ் 1957 பெப்ரவரியில் அலிசியா லோபஸ் ஹாரிசன் டிலார்ட் என்பவரைத் திருமணம் செய்தார். இவர்களுக்கு ஜான்சார்லஸ் மார்டின் நாஷ் என்ற மகன் பிறந்தார். 1959 ல் நாஷ் உளநோய்க்கு ஆளாகி பல ஆண்டுகள் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று 1970 களில் மெல்ல மெல்ல நலமடைந்து, 1980ம் ஆண்டு மீண்டும் கல்விப் பணிக்குத் திரும்பினார். ஆனாலும் மனநோயாளர்களுக்கான அறிகுறிகளும் அச்ச உணர்வும் அவரை விட்டு விலகவில்லை.

நாஷ் 86 வயதில் அதாவது 2015ம் ஆண்டு தன் மனைவியுடன் விமான நிலையத்திலிருந்து வீடு செல்லும் வழியில் வாகனம் விபத்துக்குள்ளாகியது. இதில் இருவருமே மரணமடைந்தனர். இவருடைய வரலாற்றைச் சித்தரிப்பதாக 2002ம் ஆண்டு எடுக்கப்பட்ட A Beautiful Mind என்ற திரைப்படம் 8 ஒஸ்கார் விருதுகளைப் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

## ஸ்டீபன் வில்ற்ஷையர்

## வலு- 18




லண்டனில் 1974ம் ஆண்டு பிறந்தவர் ஸ்டீபன் வில்ற்ஷையர் ஆவார். இவர் குழந்தைப் பருவத்தில் பேச்சுத்திறன் குன்றி இருந்தார். மூன்று வயதான போது இவருக்கு ஓட்டிஸ பாதிப்பு இருப்பது தெரிய வந்தது. இதற்கான சிகிச்சை வழங்கப்பட்டது. இவர் 5 வயதில் லண்டன் குயீன்மில் பாடசாலைக்கு அனுப்பப்பட்டார். இங்கு அவருக்கிருந்த ஓவியத்திலான ஈடுபாடு வெளிப்பட்டது. ஆரம்பத்தில் மிருகங்கள் மற்றும் அமொரிக்க கார்கள் மீதிருந்த ஈடுபாட்டினால் அவற்றை வரைவதில் ஆர்வம் காட்டினார். ஸ்டீபனுக்கு 7வயதாக இருக்கும் போது பிரமிக்கத்தக்க வகையில் உயர்ந்த கட்டடங்களை வரையத் தொடங்கினார். ஸ்டீபனுக்கு 8வயதில் அப்போது இங்கிலாந்தின் பிரதமராக இருந்த எட்வேர்ட் ஹீத் என்பவருக்கு செயில்ஸ் பெரி தேவாலயத்தை வரைந்து பரிசாகக் கொடுத்தார். பயிலுனர்கள், போதனாசிரியர்களின் விடா முயற்சியினால் 9 வயதில் பேசும் திறனைப் பெற்றார்.

“இலண்டன் அகரவரிசை” என்ற தலைப்பில் லண்டனிலுள்ள கட்டடங்களை வரிசைக் கிரமப்படி வரைந்து அனைவரையும் வியப்பில் ஆழ்த்தினார். 1987ல் பீபீசி நிகழ்வொன்றில், “முட்டாள்த்தனமான புத்திசாலிகள்” என்ற தலைப்பில் இவர் வரைந்த ஓவியங்கள் வெளியிடப்பட்டது. இதன் மூலம் இவர் திறமைகள் வெளி உலகிற்கு வெளிச்சம் போட்டு காண்பிக்கப்பட்டன. இலண்டன் ஓவியக் கல்லூரியில் 1995-1998 இற்கு இடைப்பட்ட காலத்தில் ஓவியக்கல்வி தொடர்பான பயிற்சியை பெற்ற இவர் 1998ல் பட்டதாரியாகினார்.

இவர் உலங்கு வானூர்தியில் பயணித்து காணும் காட்சிகளை அப்படியே ஓவியங்களாக தீட்டியுள்ளார். இது இவருக்கு பெருமை தேடிக் கொடுத்திருக்கிறது. இதன் ஒரு அங்கமாக 4 சதுர மைல் விஸ்தீரணமான லண்டனை வரைந்து சாதனை படைத்துள்ளார். மேலும் நியூயோர்க்கின் 395 ச.கி.மீற்றர் பரப்பளவில் உள்ள காட்சிகளை 20 நிமிட உலங்கு வானூர்தி பயணத்ததில் கண்டு அதை அப்படியே 19 அடி நீளத் துணியொன்றில் வரைந்து வியப்பில் ஆழ்த்தினார். மே மாதம் 2005ம் ஆண்டு 10 மீற்றர் நீளமான கன்வஸ் சீலையொன்றில் ரோக்கியோ நகரை வரைந்தார். மேலும் உலங்கு வானூர்தி பயணங்களின் ஊடாக ஒக்டோபர் 2009ல் நியூயோர்க் நகரையும், ரோம், ஹொங்ஹொங், பிராங்பேர்ட், மட்ரிட், டுபாய், ஜெருசலேம் போன்ற நகரங்களையும் கன்வஸ் துணியில் வரைந்து பார்ப்போரை அதிசயிக்க வைத்துள்ளார்.

இவர் ஓவிய உலகத்திற்கு அளித்த மகத்தான பங்களிப்பக்காக, 2006ம் ஆண்டு பிரித்தானிய சாம்ராஜ்யத்து 2ம் எலிஸபெத் மகாராணியால் கௌரவிக்கப்பட்டார். ஸ்டீபன் ஒரு சிறந்த எழுத்தாளரும் ஆவார். 1991 ல் இவர் எழுதிய “மிதக்கும் நகரங்கள்” என்ற 3வது நூலானது சண்டே ரைம்ஸ் பத்திரிகையில் வெளியாகி விற்பனையில் சாதனை படைத்தது. லண்டனில் இவர் தனது ஓவியங்களை உள்ளடக்கிய ஓவியக்கலைக்கூடம் ஒன்றை திறந்து வைத்துள்ளார். இவற்றைக் கண்டு நேரில் ரசிக்கக் கூடுவோர் ஏராளம் ஏராளம். ஓட்டிசப் பாதிப்புக்குள்ளான ஸ்டீபனின் வரலாறு இந் நோயினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஒரு வழிகாட்டியாக அமையும் என நம்பலாம்.

## றிச்சர்ட் பேர்ண்ஸ்டைன்

## வலு- 19



றிச்சார்ட் 1974ம் ஆண்டு அமெரிக்காவின் மிக்சிக்கன் நகரில் பிறந்தார். இவர் பிறக்கும் போதே Retinitis pigmentosa என்ற நோயினால் பாதிக்கப்பட்டமையினால் கண் பார்வையினை இழந்திருந்தார். எனினும் இவர் தனது வாழ்க்கை இருளவில்லை என்ற தன்னம்பிக்கையோடு கல்வியைத் தொடர்ந்தார். 1999ம் ஆண்டு ஒரு சட்டத்தரணியாக வெளிவந்தார். பின்னர் தனது தந்தையின் சட்ட நிறுவனத்தில் இணைந்து ஏனையோர் கையாள விரும்பதாத, செலவு மிகுந்த சவாலான வழக்குகளை பொறுப்பெடுத்து வாதாடினார். இதனால் பல பிரசித்தமான வழக்குகளில் இவர் பெயர் அடிபடுகின்றது. இதில் பஸ் வண்டிகளில் சக்கர நாற்காலி பொருத்துவது சம்பந்தமான வழக்கு, அமெரிக்க நீதி அமைச்சு டெட்ரொயிட் நகரசபைக்கு எதிராகக் தொடுத்த வழக்கு என்பவை பிரசித்தமானவை.

றிச்சார்ட் தனது நீதிமன்ற வழக்குகளை கையாளுதல் தொடர்பாக கூறும் போது, மன்றில் வழக்குகளில் பலவற்றைப் பேச வேண்டியிருக்கும், எனவே பலரைப்பற்றிய பல தகவல்களை ஞாபகத்தில் வைத்திருந்தாக வேண்டும். இதற்காகத் தினமும் 15 மணி நேரம் உழைக்கும் பழக்கம் எனக்கு இருக்கின்றது. என் நண்பர்கள் குறிப்பேட்டில் குறித்து வைத்ததைப் பார்த்து வாதாடுவார்கள். என்னால் அப்படிச் செய்ய முடியாதே” என்று சொல்லுகிறார் இவர்.

அமெரிக்காவில் பார்வை இழந்தவர்கள் பலர் வேலைவாய்ப்பு இன்றி காணப்படுகின்றனர். அங்கும் பார்வை அற்றோர் வேலை பெறுவதில் பல இடையூறுகளுக்கு முகம் கொடுக்கத்தான் வேண்டி இருக்கிறது. றிச்சாட்டும் சட்டக்கல்லூரியில் படித்துக் கொண்டிருந்த சமயம் 65 சட்ட நிறுவனங்களில் நேர்முகப் பரீட்சைக்காக சென்றுள்ளார். ஆனால் அங்கு அவருக்கு வேலை கிடைக்கவில்லை. எனினும் அவர் மனம் தளராது தன்னம்பிக்கையோடு போராடியதன் விளைவாக வக்கீலாகவும், பிரதம நீதியரசராகவும் வந்துள்ளார். அமெரிக்க சுப்ரீம் நீதிமன்றத்தின் நீதவான் ஆகியதன் மூலம் மிச்சிக்கன் பிராந்தியத்தின் முதலாவது பார்வை இழந்த சுப்ரீம் நீதிபதி என்ற பெருமையை பெற்றார். மேலும் இவர் மிச்சிக்கன் பல்கலைக்கழகப் பேராசிரியராகவும் இருந்திருக்கிறார். மேலும் பேச்சாற்றல் மிக்க இவர் ''உங்கள் பலத்தின் மூலதனம்'' என்ற தலைப்பில் பல நாடுகளில் உரையாற்றி இருக்கிறார். அதுமட்டுமன்றி 18 தடவைகள் மரதன் ஓட்டப் போட்டிகளில் கலந்து கொண்டுள்ளார். இது இவருக்கு பெருமையினைப் பெற்றுத் தந்துள்ளது.

## சத்ரேந்திரா சிங்

## வலு- 20



இந்தியாவின் மத்திய பிரதேசத்தில் சத்ரேந்திரா சிங் பிறந்தார். இவர் பிறந்து இரு வாரங்களின் பிறகு வயிற்றோட்டத்தினால் பீடிக்கப்பட்ட போது மேற்கொள்ளப்பட்ட தவறான மருத்துவ சிகிச்சையினால் இடுப்புக்குக் கீழே இரு கால்களும் 60 வீதமான வலுவை இழந்து விட்டன. இருப்பினும் இவர் பெற்றோர்கள் இவரின் வளர்ச்சிக்கு பெரிதும் துணை புரிந்தனர். இவர்களின் முயற்சியினால் ஆரம்பத்தில் பல இடையூறுகளுக்கு மத்தியில் ஆரம்பக்கல்வியைக் கற்றார். இவர் இடை நிலைக்கல்வி மற்றும் உயர்நிலைக்கல்வி என்பனவற்றில் தேர்ச்சிபெற்று ஒரு பட்டதாரியானார். அத்துடன் கணனித் துறையிலும் டிப்லோமா பெற்றுள்ளார். கல்வித் துறையில் சிறந்து விளங்கினாலும் இவரை உலகறிய வைத்தது நீச்சல் துறை தான்.

சிங் மத்திய பிரதேசத்தில் உள்ள ஒரு கிராமத்திலே வசித்தார். இவர் பள்ளியில் படிக்கும் காலத்திலேயே அங்குள்ள ஆறுகளில் நீச்சல் அடிப்பது வழக்கம், இதை ஒரு பொழுது போக்காக கொண்டிருந்தார். அதனாலே அவருக்கு இயற்கையாகவே நீந்தும் திறமை ஏற்பட்டது. இதன் மூலம் தன்னை உலகுக்கு தெரியப்படுத்த நினைத்தவருக்கு யாரும் ஆதரவு கொடுக்கவில்லை. இதற்குக் காரணம் வலுவிழந்த நிலையில் இவர் நீந்துவதால் சில வேளைகளில் நீரில் மூழ்கி போய்விடலாம் அல்லது ஆற்று நீர் அடித்துப் போய்விடலாம் இதனால் உயிராபத்து வந்துவிடும் என அம்மக்கள் யோசித்தமையே ஆகும். இவ்வேளை ஒருநாள் 12 வயது சிறுவன் ஒருவன் நீரில் மூழ்கி தத்தளித்த போது சிங் அவனைக் காப்பாற்றி அனைவரது எண்ணத்தினையும் மாற்றிவிட்டார்.

சிங் நீச்சல் திணைக்கள விரிவுரையாளரான Dr. டபாஸ் என்பவரை சந்தித்ததன் விளைவாக அவரின் வழிகாட்டலில் ஒரு வருட பயிற்சியினைப் பெற்றார். 2009 ம் ஆண்டு கொல்கத்தாவில் மாற்றுவலு கொண்ட வீரர்களுக்கான நீச்சல் போட்டியில் 400 வீரர்களுடன் போட்டியிட்டு 3ம் இடத்தினைப் பெற்றுக்கொண்ட சிங் தனது நீச்சல் திறமையை உலகறிய செய்தார். 2017ல் அவுஸ்திரேலியாவில் இடம் பெற்ற மூன்று வேறுபட்ட நீச்சல் போட்டிகளில் தங்கப்பதக்கம் வென்ற இவர் அதே ஆண்டு மும்பையில் அரபுக் கடலின் 33 கி.மீற்றர் தூரத்தை நீந்திக் கடந்துள்ளார். மேலும் 2018 ஜூன் மாதம் ஆங்கிலக் கால்வாயை நீந்தி கடந்து சாதனை படைத்தார். இவர் மத்திய பிரதேசத்தின் அதிஉயர் விளையாட்டுத் துறை விருதான ''விக்ரம்

விருதினை பெற்றுள்ளார். கால்கள் செயலற்ற நிலையிலும் இவரது நீச்சல் பயணம் இன்றும் தொடர்ந்த வண்ணமாகதான் உள்ளது.

## வைக்கம் விஜயலட்சுமி

## வலு- 21



இந்தியாவைச் சேர்ந்த வைக்கம் விஜயலட்சுமி பிறக்கும் போதே பார்வையற்றவர். திரைப்பட பின்னணிப் பாடகியான இவர் 1981ம் ஆண்டு அக்டோபர் மாதம் 7ம் திகதி முரளிதரன் விமலா தம்பதியினருக்கு மகளாகப் பிறந்தார். விஜயதசமி நன்நாளன்று பிறந்தமையால் தான் போலும் இவர் இசைத் துறையில் ஆர்வமிக்கவராய் விளங்கினார். இவர் மிகச்சிறு வயதிலேயே பாடல்களைக் கேட்டு அதை அப்படியே இராகம் தாளம் பிறழாமல் பாடும் திறமை கொண்டவர். அதைக் கண்ட விஜயலட்சுமியின் தந்தை அவரை ஊக்கிவித்தது மட்டுமன்றி, ஒற்றைக்கம்பி வீணை ஒன்றையும் அமைத்துக் கொடுத்தார். இதன் காரணமாக இவருக்கு ஒற்றைக்கம்பி வீணை காயத்ரி என்ற பெயர் கிட்டியது. குன்னக்குடி வைத்தியநாதன் அவர்களே இந்த வீணைக்கு காயத்ரிவீணை எனும் பெயரைச் சூட்டினார்.

இவர் மலையாளத் திரைப்படமாகிய ''செல்லுலாய்டு'' படத்தில் பாடியதன் மூலம் பின்னணிப் பாடகியாக திரையுலகத்தில் அறிமுகமானார். பின்னர் தமிழ் சினிமாவுக்காக ஜே.சி.டானியல் திரைப்படத்தில் காற்றே காற்றே என்ற பாடலையும், வீரசிவாஜி திரைப்படத்தில் சொப்பன சுந்தரி நான் தானே என்ற பாடலையும், என்னமோ ஏதோ திரைப்படத்தில் புதிய உலகை புதிய உலகை என்ற பாடலையும் பாடி, தனக்காக ஏராளமான ரசிகர் கூட்டத்தினை சேர்த்துக் கொண்டார் விஜயலட்சுமி. தற்போது சிவகார்த்திகேயன் தயாரித்துள்ள கனா படத்தில் வாயாடி பெத்த புள்ள என்ற பாடலை கேரளாவில் இருந்து கொண்டு ஸ்கைப் மூலம் ஸ்ருடியோவில் பாடிக் கொடுத்திருக்கிறார். இப் பாடல் அனைவரையும் கவர்ந்தமையினால் இவரின் புகழ் மேலும் உயர்வடைந்தது. இவ் வெற்றியானது தனக்கு இன்னும் பல திரைப்படங்களில் பாடல்களினைப் பாட வாய்ப்பினைப் பெற்றுத் தரும் எனக் நம்புகின்றார். 2018ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 18ம் திகதி அன்று இவருக்கும் அனூப் என்ற மிமிக்ரி கலைஞருக்கும் குடும்பத்தார் மற்றும் பிரபலங்கள் மத்தியில் ஊர்க்கோயிலில் திருமணம் நடந்தது.

இவர் அமெரிக்கா சென்று மருத்துவ ஆலோசனை பெற்றபோது கண் மற்றும் மூளை நரம்புகளுக்கிடையிலான சிக்கல் தான் பார்வை குறைபாட்டுக்கு காரணம் என்றும், சிகிச்சைக்காக இரண்டு வருடங்கள் காத்திருக்க வேண்டும் என்றும் மருத்துவர்கள் கூறினர். சமீபத்தில் விகடன் இவரை பேட்டி கண்ட போது நீண்ட கால ஆசை பற்றிக் கேட்கப்பட்டது. கண் பார்வை இல்லாததை குறிப்பிட்டு தனக்கு பார்வை கிடைத்ததும் தன் பெற்றோரை நேரில் பார்த்து ரசித்து ஆசை தீர ஆறத்தழுவிக் கொஞ்ச வேண்டும் என்பதே ஆசை என்பதனை வெளிப்படுத்தியதோடு, இசை ஜாம்பவான்களான ஏ.ஆர். ரஹ்மான், இளையராஜா ஆகியோரின் இசையிலும் பாடவேண்டும் என்பதையும் கூறியுள்ளார். கடந்த 10 வருடங்களில் சென்னை மாநகரின் அனைத்து முக்கிய சபாக்களிலும் 400க்கு மேற்பட்ட மேடைகளில் இவர் கச்சேரி அரங்கேறி இருப்பதாக கூறப்படுகிறது.

### ஓவியர் ராங்

வலு – 22



சீனாவைச் சேர்ந்த ராங் என்பவர் இரண்டு கைகளும் வளர்ச்சி குன்றிய நிலையில் பிறந்தார். பின்னர் அவரது வளர்ச்சிக்கு ஏற்ப கைகள் வளரவில்லை. 10 செ.மீட்டரே ஆன இவரது கையில் மூன்று விரல்கள் மட்டும் தான் இருந்தன. சிறு வயதினிலிருந்தே ஓவியத் துறையில் நாட்டமுடையவராக விளங்கிய இவர் தன்வாயாலும் கால் விரல்களாலும் ஓவியங்களை வரையக் கற்றுக் கொண்டார். 1999ல் சீனாவிலுள்ள ஓவிய அக்கடமி ஒன்றில் இணைந்ததன் ஊடாகவும், 2003ல் சீன ஓவிய மாஸ்டர் பயிற்சியில் இணைந்ததன் ஊடாகவும் தனது ஓவியத் திறனை மேம்படுத்திக் கொண்டார். பல தொலைக்காட்சி அலைவரிசைகளினுடாக தனது ஓவியத் திறமைகளை வெளிக்காட்டி தன்னை உலகுக்கு அறிமுகப்படுத்திக் கொண்டார். இவர் பல ஓவிய எழுத்தழகியல் போட்டிகளில் பங்குபற்றி 30க்கும் மேற்பட்ட தேசிய விருதுகளைப் பெற்றுள்ளார். இப்போது இவர் வலுவிழந்தோருக்கான சீனாவின் நுண்கலை அமைப்பின் அங்கத்தவராக இருப்பதோடு, வலுவிழந்தோருக்கான எழுத்தழகியல் அமைப்பிலும் அங்கத்துவம் வகிக்கின்றார். 2005ம் ஆண்டு ராங் நடிகராகவும் நடனக்கலைஞராகவும் கௌரவிக்கப்பட்டார்.

## மார்லா ருன்யான்

வலு -23




அமெரிக்காவைச் சேர்ந்த மார்லா ருன்யான் என்பவருக்கு 9 வயதாக இருந்த போது Stargardt disease எனும் நோய் தாக்கியது. இதனால் இவருக்கு பார்வைக் குறைபாடு ஏற்பட்டது. இருந்த போதிலும் இவரது விடாமுயற்சியும் பெற்றோர்களின் அரவணைப்பும் இருந்தமையால் சிறு வயதினிலிருந்தே வயலின் வாசித்தல், குதிரையோட்டம், உயரம் பாய்தல், ஓட்டப் போட்டிகள் என்பனவற்றில் சிறந்து விளங்கினார்.

மார்லா ஓர் சிறந்த தடகள வீராங்கனையாவார். இவர் 1992 ல் பார்சலோனா நகரில் இடம்பெற்ற வலுவிழந்தோருக்கான ஒலிம்பிக்போட்டியில் 5 தங்கப் பதக்கங்களை பெற்றுள்ளார். மேலும் 2000 ம் ஆண்டில், முதன்முதலாக ஒரு கோடைகால ஒலிம்பிக்கில்

கலந்து கொண்டதன் மூலம் இப் போட்டிகளில் பங்குபற்றிய பார்வையற்ற பெண் வீராங்கனை என்ற பெருமையையும் பெற்றுக் கொண்டார். 2002 இல் 1500 மீற்றர் ஓட்டப் போட்டிகள் மூன்றிலும், 5000 மீ. ஓட்டப் போட்டியிலும், மற்றும் மரதன் ஓட்டப்போட்டியிலும் முதலிடங்களை பெற்றுக் கொண்டார்.

இவர் “No Finish Line: My Life as I See It” எனும் நூலின் தனது வாழ்க்கை வரலாற்றினை எழுதியுள்ளார். இந்த நூல் 2002இல் வெளியானது

## தீபா மாலிக்

வலு – 24




இந்தியாவின் ஹரியானா மாநிலத்தைச் சேர்ந்தவர் தான் தீபா மாலிக். இவருக்கு 28 வயதாக இருந்தபோது பேரப்லெஜிக்கால் நோய் தாக்கியது. இதற்காக செய்யப்பட்ட அறுவை சிகிச்சையினால் இடுப்புக்கு கீழ் பகுதி செயல் இழந்தது. இதனால் இவர் தனது வாழ்க்கையியை சக்கர நாற்காலியில் கழிக வேண்டியதாயிற்று. எனினும் தன்னம்பிக்கையோடு பயணித்த இவர் உலகின் மிகவும் ஆபத்தான ரேஸ் என்று அழைக்கப்படும் ஹிமாலயன் மோட்டர் ரேசில் பாலைவனங்கள் துருவப் பனிப்பிரதேசங்கள் எனப் பல கடுமையான பிரதேசங்களுாடாக சென்று 800 கிலோ மீட்டர் தூரப் பயணத்தை வெற்றிகரமாக நிறைவு செய்துள்ளதுடன் யமுனா நதியின் நீரோட்டத்தை எதிர்த்து ஒரு கிலோ மீட்டர் தூரத்திற்கு நீந்தி சென்று லிம்கா சாதனையையும் படைத்துள்ளார். தீபா மாலிக் 2016ம் ஆண்டு ரியோ பாரா ஒலிம்பிக்கில் வெள்ளிப்பதக்கத்தையும், நியூசிலாந்தில் 2011ஆம் ஆண்டு நடைபெற்ற மாற்றுத்திறனாளிகளுக்கான உலக சம்பியன் போட்டியில் குண்டு எறிதலில் வெள்ளிப்பதக்கத்தையும் பெற்றுள்ளார். தேசிய அளவில் 45 தங்கம், 5 வெள்ளி, 2 வெண்கலம் என 52 பதக்கங்களையும், சர்வதேச அளவில் 13 பதக்கங்களையும் சுவீகரித்த இவர் 2012ம்ஆண்டு அர்ஜுனா விருதையும் பெற்றுள்ளார். இருசக்கர மோட்டார் வாகனம் மற்றும் கார் பந்தயங்களில் ஆர்வமுள்ள தீபா அதற்கான ஓட்டுநர் உரிமங்களையும் பைக் ரேஸிற்கான உரிமத்தினையும் பெற்றுள்ளார். இவற்றைத் தாண்டி சிற்றுண்டிச்சாலையொன்றைத் தொடங்கிய இவர் பின்னர் அதனை பெரிய ரெஸ்ரோரஸ்சாக மாற்றியுள்ளார்.

## ரூஸ்வெல்ட்

**வலு-25**



அமெரிக்காவின் நியூயோக் நகரிலுள்ள ஹைட் பார்க்கில் 1882ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 30திகதி ஜேம்ஸ், சாரா ஆன் திலானோ தம்பதிகளுக்கு மகனாகப் பிறந்தவர் தான் ரூஸ்வெல்ட். இவர் உலக வல்லரசான அமெரிக்க நாட்டின் அதிபராக 4தடவைகள் ஆட்சி செய்திருக்கின்றார். இவர் மூன்றாவது நான்காவது தடவையாக ஆட்சிப்பீடத்திலிருந்த போது இரண்டாம் உலக மகாயுத்தம் நடந்து கொண்டிருந்தது. அமெரிக்காவின் 32 வது ஜனாதிபதியாக 1933இல் பதவியேற்று ஏப்ரல் 1945வரை தொடர்ந்த இவர் ஆட்சிக் காலம், அமெரிக்க சரித்திரத்தில் மறக்க முடியாத ஒன்று. 1940இல் இவர் மூன்றாவது தடவையாக ஜனாதிபதியாகத் தெரிவாகியபோது, அமெரிக்காவில் புதிய சரித்திரம் படைக்கப்பட்டது. ஒருவர் அமெரிக்காவின் ஜனாதிபதி பதவியை மூன்றாவது தடவையாகப் பொறுப்பேற்றது இதுவே முதற் தடவையாகும்.

இப்படியான ஒரு சரித்திர சாதனையாளர் ஜனாதிபதியாக பதவியேற்பதற்கு முன்னர் கடும்நோய்வாய்ப்பட்டிருந்தார் என்பது பலருக்கு தெரியாத விடயம். 1921இல் உதவி ஜனாதிபதி பதவிக்காக இவர் போட்டியிடத் தன்னைத் தயார்படுத்திக் கொண்டிருந்தார். ஆகஸ்ட் 1921இல் இவரைப் போலியோ தாக்கியது. பொதுவாக 5 வயதுக்குட்பட்ட பிள்ளைகளைத் தாக்கும் இந்த நரம்பியல் நோய், இவரை 38வயதில் தாக்கியது. ஒரு கட்டத்தில் உடம்பு இயங்க முடியாத நிலை ஏற்பட்டது. இடது பக்கம் முழுவதும் இயங்காத நிலை ஆனாலும் “வழமைபோல நான் ஒரு நாள் நடந்து திரிவேன்” என்ற திடமான நம்பிக்கையோடு வாழ்க்கையைத் தொடர்ந்தார் ரூஸ்வெல்ட்.

1922இல் நடந்த தேர்தல் மூலம் அரசியல் களத்தில் குதிக்கலாம் என்ற அவரது நம்பிக்கையை, எதிர்பாராத நோய் தவிடுபொடியாக்கும் என்றுதான் பலரும் நம்பினார்கள். ஆனால் தன்னம்பிக்கையை ரூஸ்வெல்ட் இழக்கவில்லை. உடம்பை வருத்தி கடும் பயிற்சிகளில் தன்னை ஈடுபடுத்தத் தொடங்கினார். இடுப்பைச் சுற்றி இரும்பாலான வளையமணிந்து, இரும்புக் காலின் உதவியுடன், சிறுதூரம் நடந்து செல்ல பழகிக் கொண்டார். பொது இடங்களில் சக்கர நாற்காலி மூலம் வருவதை அறவே தவிர்த்துக் கொண்டார். “இயலாதவன்” என்ற விம்பத்தை பத்திரிகைகள் ஏற்படுத்தா வண்ணம், மிக ஜாக்கிரதையாக இவர் நடந்து கொண்டார். பொது இடங்களில் உரையாற்றும்போது கூடுமானவரையில், நிமிர்ந்து நின்று உரையாற்ற இரண்டு பக்கங்களிலும், இரு பிள்ளைகளை நிற்க வைத்திருப்பது வழமை. 1925.ன் ஆரம்பத்தில், அமெரிக்காவின் தெற்குப் பிராந்தியத்தில் வாழ்ந்த போது இவர் கடும் பயிற்சிகளில் ஈடுபட்டிருந்தார். இவ்வேளை தன்னை ஒரு திறமைமிக்க பேச்சாளராக மாற்றிக் கொள்ள இவர் தவறவில்லை.

1928இல் இவருக்கு நியூயோர்க் நகரின் ஆளுநர் பதவிக்கு போட்டியிடும் வாய்ப்பு தேடிவந்தது. இத்தேர்தலில் போட்டியிட்டு 25,000 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றார். நியூயோர்க் நகரின் ஆளுநராக பதவியேற்ற முதலாவது வருடம். விவசாயிகளின் நலன் கருதி இவர் பெரிதும் உழைத்தார். பல வரிச் சலுகைகளை இவர் அறிமுகப்படுத்தியதோடு. பொதுமக்களின் அத்தியாவசிய பாவனைப் பொருட்களின் விலைகளினையும் குறைக்க வழி செய்தார். 1930 இல் நடைபெற்ற தேர்தலில் 725,000 வாக்குகள் வித்தியாசத்தில் இவர் பெற்ற வெற்றி, இவர் எப்படி மக்களின் நாயகனாக மாறிக் கொண்டிருக்கிறார் என்பதைப் பறைசாற்றியது.

1933இல் இவர் பெரும்பான்மையான வாக்குகளுடன் அமெரிக்க ஜனாதிபதியாகத் தெரிவானார். 1936இல் இரண்டாவது தடவையாகப் போட்டியிட்டபோது, இவருக்கு 27 மில்லியனுக்கு அதிகமான வாக்குகள் கிடைத்து. இவரை எதிர்த்துப் போட்டியிட்டவருக்கு கிடைத்தது 17 மில்லியன் வாக்குகள் மாத்திரமே!

தனது 63வது வயதில் நோய் வாய்ப்பட்ட இவர் அதாவது 1945ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 12ஆம் திகதி மரணத்தை தழுவினார்.